
# වාර්ෂික වාර්තාව
# ஆண்டு அறிக்கை
# ANNUAL REPORT 2020













ජාතික ගමනාගමන කොමිෂන් සභාව
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
NATIONAL TRANSPORT COMMISSION

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (தேபோஆ)


**முகவரி**

241, பூங்கா வீதிஇ

கொழும்பு 05

**இணையத்தளம்**

றறற.வெஉ.பழஎ.டம

**மின் அஞ்சல்**

கைெழ;வெஉ.பழஎ.டம

துரித அழைப்பு

1955

NTC/PL/Annual Report / 2020 2021.02.08

கௌரவ போக்குவரத்து அமைச்சர்,
போக்குவரத்து அமைச்சு,
7ஆவது மாடி,
செத்சிறிபாய கட்டம் 11
பத்தரமுல்லை.

**ஆண்டறிக்கை – 2020**

1971இன் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) பிரிவின் நியதிகளின் படியும் அரசாங்கத் தொழில் முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்களின் அத்தியாயங்கள் 05 மற்றும் 06 இன் பிரகாரமும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31ஆந் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை, வருடாந்த கணக்குகள் அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை ஆகியவற்றை மிகவும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

சஷி வெல்கம,
தலைவர்,
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

# உள்ளடக்கம்

**அத்தியாயம்** **பக்கம்**


ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு 1
தலைவரின் செய்தி 5
மொத்தப் பகுப்பாய்வு 6
எமது இலக்குகளும் / குறிக்கோள்களும் 7
ஆணைக்குழுவின் கட்டமைப்பு 8
2020ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை 9
1. சமூக நலனை முதன்மைப்படுத்தும் பேருந்துச சேவையினை வழங்குதல் 9
1.1 பாடசாலைப் பேருந்துச் சேவை செயற்றிட்டம் 'சிசு செரிய' 9
1.2 கிராமிய பேருந்துச் சேவைச் செயற்றிட்டம் - ''கெமி செரிய'' 11
1.3 இரவு நேர பேருந்து சேவை செயற்றிட்டம் - ''நிசி செரிய'' 12
2. பேருந்து ஊழியர் குழுவினரை பதிவுசெய்தலும் பயிற்சி அளித்தலும் 13
3. போக்குவரத்துக் கேள்வி மற்றும் சேவை தர ஆய்வு 14
4. தூரப் பயணச் சேவை சமிக்ஞைப் பலகைகள் 15
5. நேர அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தி அமைத்தல் 16
6. பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குதல் 16
7. போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி 17
8. தகவல் தொழில்நுட்பத் தொகுதி 18
8.1 நிறுவனச் செயற்பாடுகளை தன்னியக்கமயப்படுத்தல் செயற்றிட்டம் 18
8.2 கூகள் தொழில்நுட்பத்தின் ஊடாக பொதுப் போக்குவரத்துச் சேவையினை இனங்காணுதல் (புவுகுளு) 19
8.3 ஆலடிரளளட யிடஉையவழைெ வெளியீடு 19
8.4 பேருந்துகளில் புீளு பொருத்துதல் 20
9. பிரீபெய்ட் அட்டை முறை (நுடநஉவசழெைஉ குயசந ஊழடடநஉவழைெ) 20
10. பொதுமக்கள் முறைபாடுகள் 20
11. நிறுவனச் சீர்த்திருத்தங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி 21
11.1 பேருந்துத் தரிப்பிடங்களைக் கட்டுதல் மற்றும் நவீனமயப்படுத்துதல் 21
11.2 தேபோஆ கட்டடங்களைப் புதுப்பித்தல் 21
11.3 மின்சாரத்தினைச் சிக்கனப்படுத்துவதற்காக நிறுவனத்தினுள் மாற்று மின் உற்பத்தி (சூரிய பேனல்கள்) 22
12. மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் 23
13. நடமாடும் சோதனையிடல்கள் மற்றும் விசாரணை 23
14. தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை 24
15. ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி 24
16. கோவிட் 19 தொற்றுப் பரவல் காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட பணிகள் 25
வருடாந்தக் கணக்கு 27
கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 45
தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2020 திசெம்பர்... 57

# ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு

## 2020 பெப்ரவரி முதல் 2020 மே வரை

| | | |
|---|---|---|
| 1. | திரு. சஷி வெல்கம | - தலைவர் |
| 2. | திருமதி. டீ.சீ.டபிள்யூ. ஹப்புகொட | - உறுப்பினர் (பதவி வழி) |
| 3. | திரு. எம்.வீ.எம்.டீ.பீ. தனுஷ்க | - உறுப்பினர |
| 4. | திரு. எஸ்.ஆர். கொடமுணே | - உறுப்பினர் |
| 5. | திருமதி. ஏஸ். ஜலதீபன | - உறுப்பினர் (பதவி வழி) |
| 6. | திருமதி. ஏன்.வீ.என்.டீ. ஜயவர்த்தன | - உறுப்பினர் (பதவி வழி) |
| 7. | திரு. கே. புத்ததாச | - உறுப்பினர |

## 2020 யூன் முதல் 2020 ஆகஸ்ட் வரை

| | | |
|---|---|---|
| 1. | திரு. சஷி வெல்கம | - தலைவர் |
| 2. | திருமதி. டீ.சீ.டபிள்யூ. ஹப்புகொட | - உறுப்பினர் (பதவி வழி) |
| 3. | திரு. எம்.வீ.எம்.டீ.பீ. தனுஷ்க | - உறுப்பினர |
| 4. | திரு. எஸ்.ஆர். கொடமுணே | - உறுப்பினர் |
| 5. | திருமதி. ஏஸ். ஜலதீபன | - உறுப்பினர் (பதவி வழி) |
| 6. | திருமதி. ஏன்.வீ.என்.டீ. ஜயவர்த்தன | - உறுப்பினர் (பதவி வழி) |
| 7. | திரு. கே. புத்ததாச | - உறுப்பினர |
| 8. | திரு. எம். சந்திரசிறி | - உறுப்பினர |

## 2020 செப்தெம்பர் முதல் 2020 ஒக்டோபர் வரை

| | | |
|---|---|---|
| 1. | திரு. சஷி வெல்கம | - தலைவர் |
| 2. | திருமதி. டீ.சீ.டபிள்யூ. ஹப்புகொட | - உறுப்பினர் (பதவி வழி) |
| 3. | திரு. எம்.வீ.எம்.டீ.பீ. தனுஷ்க | - உறுப்பினர |
| 4. | திரு. எஸ்.ஆர். கொடமுணே | - உறுப்பினர் |
| 5. | திருமதி. ஏஸ். ஜலதீபன | - உறுப்பினர் (பதவி வழி) |
| 6. | திருமதி. ஏன்.வீ.என்.டீ. ஜயவர்த்தன | - உறுப்பினர் (பதவி வழி) |
| 7. | திரு. கே. புத்ததாச | - உறுப்பினர |

## 2020 நவம்பர் மாதத்தில்

| | | |
|---|---|---|
| 1. | திரு. சஷி வெல்கம | - தலைவர் |
| 2. | திருமதி. டீ.சீ.டபிள்யூ. ஹப்புகொட | - உறுப்பினர் (பதவி வழி) |
| 3. | திரு. எம்.வீ.எம்.டீ.பீ. தனுஷ்க | - உறுப்பினர |
| 4. | திரு. எஸ்.ஆர். கொடமுணே | - உறுப்பினர் |
| 5. | திருமதி. ஏஸ். ஜலதீபன | - உறுப்பினர் (பதவி வழி) |
| 6. | திரு. ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜயசிங்க | - உறுப்பினர் (பதவி வழி) |
| 7. | திரு. கே. புத்ததாச | - உறுப்பினர |

## 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரை

| | | |
|---|---|---|
| 1. | திரு. சஷி வெல்கம | - தலைவர் |
| 2. | திருமதி. டீ.சீ.டபிள்யூ. ஹப்புகொட | - உறுப்பினர் (பதவி வழி) |
| 3. | திரு. எம்.வீ.எம்.டீ.பீ. தனுஷ்க | - உறுப்பினர |
| 4. | திரு. எஸ்.ஆர். கொடமுணே | - உறுப்பினர் |
| 5. | திருமதி. எஸ். ஜலதீபன | - உறுப்பினர் (பதவி வழி) |
| 6. | திரு. ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜயசிங்க | - உறுப்பினர் (பதவி வழி) |
| 7. | திரு. கே. புத்ததாச | - உறுப்பினர |
| 8. | திரு. பீ.ஏ.டீ.ஏ. சம்பத் ரணசிங்க | - உறுப்பினர |

## சபைக் கூட்டம் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள்

| | |
|---|---|
| 2020 ஆண்டினுள் நடாத்தப்பட்ட ஆணைக்குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை | 13 |
| 2020 ஆண்டினுள் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களின் எண்ணிக்கை | 03 |

# தலைவரின் செய்தி



அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் நாட்டைக் கட்டியெழுப்பும் சௌபக்கியத்தின் நோக்குக் கொள்கை ஆவணத்தின் பிரகாரம் இலங்கைக மக்களுக்கு வினைத்திறன்மிக்க, உயர் தரமிக்கதாக சூழல்நேயமிக்க, வசதிமிக்க போக்குவரத்துச் சேவையொன்றினைப் பெற்றுக்கொடுப்பதற்கு போக்குவரத்திற்கு நவீன பிரவேசமொன்றினை ஏற்படுத்தும் பொருட்டு 2020 ஆம் ஆண்டில் பல செயற்றிட்டங்களைச் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு மற்றும் ஆசிரியர்களுக்கு உரிய முகாமைத்துவத்தினைக் கொண்ட பாடசாலை போக்குவரத்தச் சேவையொன்றினை அரச மற்றும் தனியார் பிரிவு ஒன்றிணைந்து தயாரித்தல், பெருந்தெருக்கள் மற்றும் புகையிரதப் பாதைகளை அடிப்படையாகக் கொண்டு போக்குவரத்துத் தொகுதியில் உள்ள பின்னடைவு மற்றும் முறிந்த பரஸ்பரத் தொடர்பினை மீள ஏற்படுத்துதல், போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்துகள் ஒன்றிணைந்து போட்டியின்றி நியாயமான வருமானத்தினை ஈட்டக்கூடியதாக மற்றும் பொது மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாதவாறு பொது நேர அட்டவணையொன்றின் கீழ் எல்லா பாதைகளிலும் ஒரு நாளைக்கு 24 மணித்தியாலங்களும் செயற்படும் பேருந்துச் சேவையொன்றினைப் பெற்றுக் கொடுத்தல், எந்தவொரு பேருந்திலும் பயன்படுத்தக்கூடிய ஈ-டிக்கட் முறையொன்றினை (E – Ticketing System) அறிமுகப்படுத்துதல், வீதி நெருக்கடி மற்றும் விபத்துகளுக்கு முக்கிய காரணமாக உள்ள சாரதிகளின் கவனமற்ற வாகன ஓட்டுதல் பதிலாக ஒழுக்கமுள்ள வாகன ஓட்டுதலுக்கு ஈடுபாடு கொள்ளச்செய்வதற்கு அவர்களின் மனப்பாங்கு, நடத்தைக்கோலத்தஜின மாற்றுவதற்குத் தேவையான அறிவு, பயிற்சியினை வழங்குவதற்கும் இவ்வருடத்தில் விசேட கவனஞ் செலுத்தப்பட்டது. ஆதன் பிரகாரம், சிசு செரிய செயற்றிட்டத்தினைத் தொடர்ந்தும் பேணிச் செல்லல் மற்றும் பிள்ளைகளுக்கு மத்தியில் இப்பேருந்துச் சேவையினைப் பிரபல்யப்படுத்துதல், தனியார் மற்றும் இபோச பேருந்துகளுக்கு ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரித்தல், புகையிரதச் சேவையுடன் ஒன்றிணைந்த பேருந்துச் சேவைகளை ஆரம்பித்தல், சாரதிகள் பயிற்சி நிகழ்ச்சிகளை புதிய கோணத்தில் செயற்படுத்துதல், பொதுப் போக்குவரத்து பேருந்துகளுக்கு பிரீ பெய்ட் அட்டை முறையொன்றினை செயற்படுத்துதல் என்பன அவற்றில் முக்கிய இடம் வகிக்கின்றன. இதற்கு மேலதிகமாக கிராமப்புற மக்களின் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு கெமி செரிய, நிசி செரிய செயற்றிட்டங்களைத் தொடர்ந்தும் பேணிச் செல்லல், பொதுப் போக்குவரத்தினைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு சௌகரியமிக்க பயணம் - சூழல்நேயமிக்க போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்குவதற்கு நவீன தொழில்நுட்பத்தினைப் பொதுப் போக்குவரத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கு செயற்றிட்டங்கள் பல செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது.

எனினும் 2020ஆம் ஆண்டில் மார்ச் மாதம் ஆரம்பித்த கோவிட் 19 தொற்றுப் பரவல் நிலை காரணமாக திட்டமிடப்பட்ட செயற்றிட்டங்கள் பல எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை நோக்கிச் செல்ல முடியவில்லையாயினும் முக்ந்கொடுக்க நேர்ந்த எல்லா சவால்களுக்கும் கீழ் திட்டமிடப்பட்ட செயற்றிட்டங்கள் குறிப்பிடத்தக்களவு மட்டத்தில் பூர்த்தி செய்வதற்கு உதவிபுரிந்த கௌரவ போக்குவரத்து அமைச்சருக்கும், போக்குவரத்து இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கும், அதற்கு உதவி புரிந்த போக்குவரத்து அமைச்சின் எல்லா உத்தியோகத்தர்களுக்கும், தேசிய போக்குரவத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபைக்கு மற்றும் ஒட்டுமொத்த பணிக்குழாத்தினருக்கும் மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைகளின் தலைவர்கள் உட்பட பணிக்குழாத்தினர்களுக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் உட்பட உத்ததியோகத்தர் குழாத்தினருக்கும் எல்லா பேருந்துகள் உரிமையாளர்களுக்கும் பல்வேறு விதத்திலும் ஆதரவு நல்கிய அனைத்து தரப்பினருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சஷி வெல்கம**
**தலைவர்**
**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

# மொத்தப் பகுப்பாய்வு

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழு



## எமது நோக்கு ...

நாட்டினுள் சமூக–பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக தரமிக்க, ஆகுசெலவு விளைபயன்மிக்க மற்றும் பாதுகாப்புமிக்க ஒன்றிணைக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டமைப்பு மற்றும் சேவை ஆகியவற்றின் மூலம் இலங்கையின் எல்லா குடிமக்களினதும் பல்வேறுபட்ட போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்தலை உறுதிப்படுத்துதல்.

## எமது பணி ...

பயணிகள் போக்குவரத்து தொடர்பான தேசிய கொள்கைக் குறித்து இலங்கை அரசிற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் திறன்மிகு பஸ் போக்குவரத்து முறைமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஒழுங்குபடுத்தற் சட்டகத்தை உருவாக்குதல்.

## எமது இலக்குகளும் / குறிக்கோள்களும்

- பேருந்துச் சேவையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை தரம் மிக்கதாகவும் போதிய அளவானதாகவும் உயர் மட்டத்தில் தொடர்ந்தும் பேணுதல்.

- வினைத்திறன்மிக்க போக்குவரத்து முறைமை ஒன்றினை அபிவிருத்தி செய்தல்

- தங்களுக்கு மிகவும் பொருத்தமான பேருந்துச் சேவையைத் தெரிவு செய்வதற்கு உதவும் விதத்தில் போக்குவரத்து முறைமை ஒன்றை அபிவிருத்தி செய்தல்

- பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்களின் உறுதிப்பாடு மற்றும் நிலைப்பாட்டினை உறுதி செய்தல்

- கிராமப்புற மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பிரதேசங்களில் செயற்படுத்தப்படும் குறைந்த வருமானம் ஈட்டும் ஆனால் சமூக ரீதியில் அவசியமான பேருந்துச் சேவைகளுக்கு நிதி உதவி அளித்தல்

- பயணிகள் போக்குவரத்துப் பேருந்துச் சேவைகள் மூலம் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பைத் தடுப்பதற்கான ஒரு வழிமுறையினைத் திட்டமிட்டு அதனை அபிவிருத்தி செய்தல்

- பேருந்து இயங்கும் நேரத்தை ஒழுங்கமைப்பதன் மூலம் பேருந்துகளின் விளைபயனை அதிகரித்தல்

- பேருந்துகளை இயக்கும் வேளையில் பாதுகாப்பையும் ஒழுங்கையும் உறுதி செய்தல்

- மாகாணங்களுக்கிடையில் மற்றும் மாகாணச் சேவையில் ஈடுபடும் பேருந்து சேவைகளின் போக்குவரத்து முறைமைகளை ஒருங்கிணைத்தல்

- நாட்டின் மொத்த உழைப்புத் திறனை மேம்படுத்துதல்

# ஆணைக்குழுவின் கட்டமைப்பு


மூன்று பதவிவழி அங்கத்தவர்களையும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் போக்குவரத்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மேலும் ஐந்து அங்கத்தவர்களையும் ஆணைக்குழு கொண்டுள்ளது. ஆணைக்குழு ஒழுங்குசார் கட்டமைப்பு தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் திட்டமிடல், இயக்கம் மற்றும் சேவைகள் கண்காணிப்பு, தர உறுதிப்பாடு, வெளியார் தொடர்பு, நிதி மற்றும் கொள்வனவு ஆகிய 4 திணைக்களங்களுக்குப் பொறுப்பாகச் செயற்படும் பணிப்பாளர்கள் நால்வரையும் கொண்டது.

2020ஆம் ஆண்டின் இறுதியில் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 219 ஆக இருந்ததுடன், சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தரப் பணியாளர்களின் எண்ணிக்கை 184 ஆகும்.

2020.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஊழியர் எண்ணிக்கை

| தொடரிலக்கம் | பதவிப் பெயர் | பணியாளர் தொகுதி | அங்கீகரிக்கப்பட்ட பணியணி | சேவையில் ஈடுபட்டிருந்த பதவியணியினர் |
|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | HM 2 -1 | 01 | 01 |
| 02 | பணிப்பாளர் | HM 1-1 | 04 | 04 |
| 03 | உதவிப் பணிப்பாளர் | MM 1-1 | 17 | 11 |
| 04 | கனிஷ்ட முகாமையாளர் | JM 1-1 | 21 | 20 |
| 05 | முகாமைத்துவ உதவியாளர் | MA 4 | 36 | 33 |
| 06 | முகாமைத்துவ உதவியாளர் | MA 2-1 | 03 | 01 |
| 07 | முகாமைத்துவ உதவியாளர் | MA 1-1 | 76 | 69 |
| 08 | சாரதி | PL 3 | 13 | 14 |
| 09 | அலுவலக உதவியாளர் | PL 1 | 12 | 12 |
| 10 | நேரக் காப்பாளர் | PL 1 | 33 | 18 |
| 11 | தொழிலாளர் | PL 1 | 03 | 01 |
| | மொத்தம் | | 219 | 184 |

மூலம் - கட்டுப்பாட்டுத் திணைக்களம், தேபோஆ



# 2020ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை

## 1. சமூக நலனை முதன்மைப்படுத்தும் பேருந்துச சேவையினை வழங்குதல்

பொதுமக்களின் தேவைகளை நிவர்த்திசெய்வதற்கு போதிய அளவில் மற்றும் நிலையில் பேருந்துகள் மூலம் பயணிகள் போக்குவரத்திற்கு உரிய சேவைகளை அபிவிருத்தி மட்டத்தில் மேம்படுத்தல் மற்றும் அச்சேவைகளை இலங்கை முழுதும் நியாயமான ரீதியில் விஸ்தரித்தல்,

சமூக ரீதியில் அவசியமான ஆனால் இலாபமற்ற வீதிப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் பயணமுறைகளின் போது, பேருந்துகள் மூலம் பயணிகள் போக்குவரத்திற்கு உரிய போதிய சேவையினை நெறிப்படுத்துவதற்கான விதிமுறைகளை ஏற்பாடுகள் செய்தல், அச்சேவை வழங்குனர்களுக்கு இடையில் சிறந்த போட்டியினை ஏற்படுத்தி நியாயமற்ற மற்றும் இலாபமற்ற போட்டித்தன்மையினைத் தவிர்த்தல் ஆகிய இலங்கை அரசாங்கத்தின் கொள்கையினை அமுல்படுத்தவதற்கு 1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தின் கீழ் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சமூக ரீதியில் அவசியமான பேருந்துச் சேவையினை வழங்குவதற்காக "சிசு செரிய"இ "கெமி செரிய", "நிசி செரிய" ஆகிய செயற்றிட்டங்களை ஆரம்பித்துள்ளது. அதற்காக 2020ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் 650.0 மிலியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

### 1.1 பாடசாலைப் பேருந்துச் சேவை செயற்றிட்டம் 'சிசு செரிய'



பாடசாலை சிறார்கள் உடல், உளச் சோர்வின்றி நேர காலத்துடன் பாடசாலைக்குச் செல்லவு ம் கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்து கொண்டு பாதுகாப்பாக வீடு திரும்பவும் சலுகைக் கட்டண முறை அடிப்படையில் நம்பிக்கைமிகு பாதுகாப்புடன் பாடசாலை சிறார்களுக்காகவே ஒதுக்கப்பட்ட பாடசாலை பேருந்துச் சேவையொன்றினை வழங்குவதற்கு 2005 ஆம் ஆண்டில் ''சிசு செரிய'' பாடசாலை பேருந்துச் செயற்றிட்டம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டது.

இச்செயற்றிட்டத்தின் கீழ் இபோச மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் மாணவர்களை ஏற்றிச்செல்வது மேற்கொள்ளப்படுவதுடன், இப்பேருந்துகளில் பயணிக்கும் பாடசாலை சிறார்களிடமிருந்து சாதாரண பேருந்துக் கட்டணத்தில் அரைபங்கினை மாத்திரம் அறவிடுதல் (இபோச பேருந்துகளில் பருவச்சீட்டுளைப் பயன்படுத்தி பயண வசதிகளை ஏற்பாடு செய்ய இயலுமாதல்) இச்செயற்றிட்டத்தின் தனித்துவமாவதுடன், அதன் மூலம் ஓட்டுனருக்கு ஏற்படும் நிதிசார் இழப்பினை மீளளிப்புச் செய்வதற்கு பாடசாலை சிறார்களை ஏற்றிச்செல்லும் 01 கி.மீற்றருக்கு 57.00 ரூபா வீதம் அதிகபட்சம் 110 கி.மீக்கு (இரண்டு பயணமுறைக்கான) அரசினால் கொடுப்பனவு

வழங்கப்படும். 2019 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் சிசு செரிய செயற்றிட்டத்தின் கீழ் நாடு முழுதும் 1419 பாடசாலை பேருந்துகள் செயற்பட்டதுடன், அதிமேதகு சனாதிபதி அவர்களின் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை ஆவணத்தின் பிரகாரம் பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் முறையான முகாமையினைக் கொண்ட பாடசாலை போக்குவரத்துச் சேவையொன்றினை அரசு மற்றும் தனியார் பிரிவு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்வதற்கு 2020ஆம் ஆண்டில் புதிய 100 சிசு செரிய பேருந்துச் சேவைகளை ஆரம்பிப்பதற்கும், இந்த சிசு செரிய சேவையினை பொதுமக்களுக்கு இடையில் பிரபல்யப்படுத்துவதற்கும் சிசு செரிய மாத்திரம் ஓடும் வாகனங்களை மஞ்சள் நிற பூச்சினை இடுவதற்கும் இச்சேவைக்குரிய பேருந்துகள் வீதியில் பயணிக்கும் போது தனித்துவத்தை ஏற்படுத்துவதற்கு சிசு செரிய இலட்சினையுடன் “இப்பேருந்தில் பாடசாலைச் சிறார்கள் பயணிக்கின்றனர்” எனக் குறிப்பிட்டு ஸ்ரிக்கர் ஒன்றினைப் பேருந்தில் ஒட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.






2020ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்திற்காக 616.97 மில்லியன் ரூபா அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மார்ச் மாதம் ஆரம்பித்த கொவிட் 19 தொற்றுநோய் பரவல் காரணமாக தொடர்ச்சியாகப் பாடசாலைகள் நடைபெறாமையால் மற்றும் பொதுப் போக்குவரத்து பேருந்துகளில் பிள்ளைகளை அனுப்புவதற்கு பெற்றோர்கள் விருப்பங்கொள்ளாமையால் 2020 ஆண்டின் இலக்குவைத்த எண்ணிக்கையிலான பேருந்துகளில் 49 புதிய சேவைகளை மாத்திமே ஆரம்பிக்க இயலுமாகியது. ஆதன் பிரகாரம் இச்செயற்றிட்டத்திற்காக 2020ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை 385.57 மில்லியன் ரூபாவாகும். மேலும் 2020 திசெம்பர் 31ஆகையில் எல்லா சிசு செரிய பேருந்துகளிலும் சிசு செரிய இலட்சினையுடன் “இப்பேருந்தில் பாடசாலைச் சிறார்கள் பயணிக்கின்றனர்” எனக் குறிப்பிட்டு ஸ்ரிக்கரினை ஒட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

2020 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் மொத்த சேவைகளின் எண்ணிக்கை கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| மாகாணம் | சிசு செரிய பேருந்துச் சேவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேல் | 426 |
| தென் | 107 |
| வடமேல் | 321 |
| வடமத்திய | 168 |
| சப்பிரகமுவா | 122 |
| ஊவா | 111 |
| கிழக்கு | 117 |
| மத்திய | 53 |
| வட | 36 |
| மாகாணங்களுக்கு இடையில் | 7 |
| மொத்தம் | 1468 |

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ

இதற்கு மேலதிகமாக, கோவிட் 19 தொற்று நோய் பரவல் காரணமாக பிள்ளைகள் சுகாதாரப் பாதுகாப்புடன் பயணிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்குதல், சுகாதாரப் பாதுகாப்புமிக்கதாக பேருந்துகளில் ஆசன எண்ணிக்கைக்கு மாத்திரம் பிள்ளைகளை ஏற்றிச் செல்வதற்கு பேருந்துகளுக்கு மேலதி பயணமுறைகளை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டன. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த. உயரிதரப் பரீட்சைகள் நடைபெற்ற காலப்பகுதியில் பிள்ளைகளை தொடர்ச்சியாக ஏற்றிச் செல்லலும் இச்செயற்றிட்டத்தின் கீழ் செயற்படும் இபோச மற்றும் தனியார் பேருந்துகளால் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 கிராமிய பேருந்துச் சேவைச் செயற்றிட்டம் –''கெமி செரிய''

எவ்வித பேருந்துச் சேவையும் செயற்படாத, சமூக ரீதியாகப் பேருந்துச் சேவையொன்று அவசியமாயினும் இலாபமற்ற பாதையென்பதால் பயணிகள் போக்குவரத்திற்கு ஓட்டுனர்கள் முன்வராத கிராமப்புற பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ''கெமி செரிய'' செயற்றிட்டம் 2005ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.



கெமி செரிய பேருந்துச் சேவைக்கு ஓட்டுனர்களைத் தெரிவுசெய்தல் திறந்த கேள்வி கோரல் முறைமையின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன், அதன்போது ஒரு கி.மீற்றருக்கு 38 ரூபா அதிகபட்ச உதவித்தொகையினைச் செலுத்தும் அடிப்படையில் 01 கி.மீற்றருக்கு குறைந்த ஏலத்தினைக் கோரும் ஓட்டுனர் தெரிவுசெய்யப்படுவார். ஆவ்வாறு தெரிவுசெயயப்பட்ட ஓட்டுனருக்கு உரிய போக்குவரத்து அதிகார சபையினால் கிராமப்புறப் பாதைகளில் பயணிகள் போக்குவரத்திற்கான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதுடன், அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் மற்றும் மாகாணப் போக்குவரத்து அதிகார சபையின் பரிந்துரை பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் உரிய பேருந்து உரிமையாளர் கெமி செரிய செயற்றிட்டத்தினுள் உள்வாங்கப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் உதவித்தொகை அதிகபட்சம் மூன்று வருடங்களுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் செலுத்தப்படும். மூன்று வருடங்களின் பின்னர், அப்பாதை பொருளாதார ரீதியாக இலாபகரமிக்க பாதையாக மாறக்கூடும் என்பதால் உதவித்தொகைக் கொடுப்பனவு நிறுத்தப்படும். ஆதன் படி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்ட கெமி செரிய சேவைகள் பல தற்போது பொருளாதார ரீதியாக இலாபகரமிக்கதாகக் கிரமப்புற மக்களுக்கு சேவையினை வழங்கி செயற்படுகின்றன.

2019 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் கெமி செரிய செயற்றிட்டத்தின் கீழ் கொடுப்பனவு வழங்கப்படும் 16 கெமி செரிய சேவைகள் செயற்படுத்தப்பட்டதுடன், நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்ச நோக்கு அரச கொள்கை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு கிராமீய பொருளாதாரத்தினை கட்டியெழுப்பும் நோக்குடன் இச்செயற்றிட்டத்தின் கீழ் புதிய 20 கெமி செரிய சேவைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டு அதற்காக 8.16 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. ஆயினும் கொவிட் 19 தொற்றுப பரவல் காரணமாக புதிய பாதைகளை இனங்காணும் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு முடியாது போனமையால் புதிய சேவைகளை ஆரம்பிக்க

இயலவில்லை என்பதுடன், புதிய சேவைகளை ஆரம்பிப்பதற்கு புதிய பாதைகள் குறித்து தகவல்கள் மாகாணப் போக்குவரத்து அதிகார சபைகள் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம், ஏற்கனவே சப்பிரகமுவா, ஊவா, கிழக்கு மாகாணங்களில் புதிய கெமி செரிய சேவைகளை ஆரம்பிப்பதற்கான 21 புதிய பாதைகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

2020.12.31 ஆந் திகதியாகையில் உதவித்தொகை பெற்று செயற்படும் கெமி செரிய சேவைகள் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| மாகாணம் | கெமி செரிய பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|
| மத்திய | 01 |
| கிழக்கு | 11 |
| வடமேல் | 04 |
| மொத்தம் | 16 |

மூலம்- திட்டமிடல் திணைக்களம் தேபோஆ

2020ஆம் ஆண்டில் கொவிட் தொற்றுப் பரவல் மத்தியிலும் ஏற்கனவே உதவித்தொகை கொடுப்பனவின் கீழ் செயற்படும் கெமி செரிய பேருந்துச் சேவைகளின் இணக்கம் நன்கு நடைபெறுவதுடன், அதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவு 4.15 மில்லியன் ரூபாவாகும்.

### 1.3 இரவு நேர பேருந்து சேவை செயற்றிட்டம் – "நிசி செரிய"




இரவு வேளையிலும் அதிகாலையிலும் பொதுப் போக்குவரத்துச் சேவையினைத் தொடர்ந்தும் மேற்கொண்டு செல்வதை ஊக்குவிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2005ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் இரவு நேரத்தில் மற்றும் அதிகாலையில் பொதுப் போக்குவரத்துப் பேருந்துகள் தொடர்ந்தும் செயற்படாமை காரணமாக பொதுமக்கள் முகங் கொடுக்கும் சிரமங்களைக் குறைத்து அவர்களுக்கு ஒரு நிரந்தரமான பொதுப் போக்குவரத்துப் பேருந்துச் சேவையினை வழங்குதல், பொது மக்களுக்கு வேறு போக்குவரத்து ஊடகங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் அதிகக் கிரயத்தினைக் குறைத்தல், அதற்காகச் செலவிடும் காலத்தினைக் குறைத்தல் என்பன இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கங்களாகும். ஆதன் பிரகாரம், இச்செயற்றிட்டத்தின் கீழ் இரவின் கடைசிப் பயண முறை மற்றும் அதிகாலையின் முதல் பயண முறைக்கு உதவித்தொகையாக 19.00 ரூபா அரசினால் கொடுப்பனவு செய்யப்படுவதுடன், பொதுமக்களிடமிருந்து அறவிடப்படுவது குறிப்பிட்ட பேருந்துக் கட்டணம் மாத்திரமே. 2019 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் 179 நிசி செரிய சேவைகள் செயற்பட்டதுடன், 2020ஆம் ஆண்டில் 80 புதிய சேவைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக 2020ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை 24.87 மில்லியன் ரூபாவாகும்.

2020.12.31ஆந் திகதியாகையில் உதவித்தொகையினைப் பெற்று செயற்படும் நிசி செரிய சேவைகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| மாகாணம் | நிசி செரிய பேருந்துச் சேவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேல் | 62 |
| தென் | 33 |
| வடமேல் | 21 |
| வடமத்திய | 11 |
| மத்திய | 37 |
| சப்பிரகமுவா | 08 |
| ஊவா | 12 |
| கிழக்கு | 03 |
| வடக்கு | 05 |
| மொத்தம் | 192 |

Source -Department of Planning, NTC

அதன் பிரகாரம், 2020ஆம் ஆண்டில் 13 புதிய சேவைகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டதுடன், கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக இச்செயற்றிட்டத்தின் பௌதிக மற்றும் நிதிசார் இலக்குகளை அடைய முடியாது போனதுடன், அதற்காக லெவிடப்பட்ட மொத்த தொகை 12.28 மில்லியன் ரூபாவாகும்.

## 2. பேருந்து ஊழியர் குழுவினரை பதிவுசெய்தலும் பயிற்சி அளித்தலும்

தரமிக்க பயணிகள் போக்குவரத்துச் சேவையொன்றினை பொதுமக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் பணிபுரியும் ஊழியர் குழாத்தினருக்கு பல்வேறு துறைகளின் கீழ் தொழிற்சார் பயிற்சியினைப் பெற்றுக் கொடுத்தல் இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

கோட்பாட்டு மற்றும் பிரயோகச் செயற்பாடுகள் தொடர்பில் கவனத்தைச் செலுத்தி இப்பயிற்சி நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. ஆதன்போது வீதிச்சட்டதிட்டங்களைப் பின்பற்றுதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் நியதிகள் வாடிக்கையாளர் கவனிப்பு உத்திகள், அபாயகர ஔடதப் பாவனையின் விளைவுகள், பேருந்தினுள் பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்கு எதிரான வனமுறைகளைத் தடுத்தல் போன்ற தலைப்புகளின் கீழ் விரிவுரைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இவ்விரிவுரைகளை நடாத்துவதற்கு இலங்கை பொலிஸ், மகளிர் மற்றும் சிறுவர் பணியகம், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை போன்ற நிறுனங்களின் அனுபவமிக்க விரிவுரையாளர்கள் கலந்துகொள்வர்.

மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளில் பணிபுரியும் சாரதிகளைப் பயிற்றுவித்தல் நிறுவனத்தினுள்ளேயும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாரதி பயிற்சிக் கல்லூரியிலும் மேற்கொள்ளப்படும். அதன்போது அவர்களுக்கு செயன்முறைப் பயிற்சியினைப் பெற்றுக்கொடுத்தல் முதலில் மேற்கொள்ளப்படும்.

பல குழுக்களாக இப்பயிற்சி மேற்கொள்ளப்படுவதுடன், புதிய சாரதிகள் நடத்தனர்களுக்கு பிரத்தியேகமான பயிற்சியும், ஏற்கனவே பணியில் உள்ள பணிக்குழாத்தினருக்கு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை பெற்றுக் கொடுக்கும் பயிற்சி நிகழ்ச்சியும் இதற்குள் அடங்கும். இதற்கு மேலதிகமாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகளில் ஈடுபட்ட சாரதிகள் நடத்துனர்களுக்காகவே பிரத்தியேகமான பயிற்சிவகுப்புகள் நடாத்தப்படும்.



இவ்வாறு மூன்று முறைமைகளின் கீழ் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளில் பணிபுரியும் பணிக்குழாத்தினருக்கு பயிற்சிகள் மேற்கொள்ளப்படுவதுடன், ஒரு பயிற்சி அமர்வில அதிகபட்சம் 120 பேர் கலந்துகொள்கின்றனர். அவ்வாறான 50 செயலமர்வுகளை நடாத்துவது வருடாந்த இலக்காகும். அதன்படி தனிநபர்களாக நோக்குகையில் வருடத்திற்கு 6000 அளவினருக்கு பயிற்சி பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

2020ஆம் ஆண்டில் இந்த 50 பயிற்சி நிகழ்ச்சிகள் இலக்கினைப் பூர்த்தி செய்வதற்கு செயற்படு திட்டமிடலில் உள்ளடக்கப்பட்டிருப்பினும் பொவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக 13 நிகழ்ச்சிகளையே நடாத்துவதற்கு இயலுமாகியது. இந்நிகழ்ச்சிகள் மூலம் 1560 பேர் அளவில் பயிற்சிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

இப்பயிற்சியின் இறுதியில் சாரதிகள் நடத்துனர்களுக்கு மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் பணிபுரிவதற்கு அடையாள அட்டை ஒன்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளில் பணிபுரிவதற்கு அவ் அடையாள அட்டையினை அணிந்திருப்பது கட்டாயமாகும்.

கோவிட் 19 தொற்றுப் பரவல் நிலைமையின் கீழ் 2020ஆம் ஆண்டில் இவ்வாறு பதிவுசெய்யப்பட்ட சாரதிகள் நடத்துனர்களுக்கு அரசாங்க உதவித்தொகை வழங்கும் செயன்முறையொன்று சமூகப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டதுடன், அவ் உதவித்தொகையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு மாகாணங்களுக்கு இடையிலான சாரதிகள் நடத்துனர்களின் பெயர்களைப் பரிந்துரைத்தல் இப்பதிவு செய்தலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

2020ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்திற்காக 4.0 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், 2020.12.31ஆந் திகதியில் இச்செயற்றிட்டத்திற்காக 2.085 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டில் செய்யப்பட்ட வரவுசெலவு திட்டத் திருத்தத்தின் போது இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 2.0 மில்லியன் ரூபாவாகத் திருத்தஞ் செய்யப்பட்டது.






## 3. போக்குவரத்துக் கேள்வி மற்றும் சேவை தர ஆய்வு

பொதுமக்களின் பயணிகள் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, ஏற்றுக்கொள்ளக்கூடிய தரமான பேருந்தச்சேவைகள் உள்ளனவா என்பதை மதிப்பாய்வு செய்தல் மற்றும் அச்சேவைகளைப் பேணவேண்டிய குறைந்தபட்ச மட்டத்தினைத் தீர்மானித்தல் என்பன 1991 இல 37ஐக் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பொறுப்பாகும். ஆதன்படி பொதுமக்களின் தேவைகளின் பிரகாரம் நம்பிக்கைமிகு, தரமிக்க, பாதுகாப்புமிகு பொதுப் போக்குவரத்து பேருந்துச் சேவையொன்றினை

செலுத்த இயலுமான கட்டணத்தில் வழங்குவதற்கு திட்டங்களைத் தயாரிப்பதற்கு தேவையான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் அத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்து தீர்மானங்களை எடுப்பதற்கு உரிய தரப்பினருக்கு அனுப்புதல் இச்செயற்றிட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை இனங்காணுதல் மற்றும் அதன்படி புதிய பேருந்துச் சேவைகளை ஆரம்பிப்பதற்கு வீடு வீடாகப் போய் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் (Household Survey) தற்போதுள்ள பேருந்துச் சேவைகள் இயங்கும் நேர அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தஞ் செய்தல் ஆகியவற்றிற்கு மேற்கொள்ளப்படும் பயணிகள் கேள்வி ஆய்வுகள் (Passenger Demand Survey), தற்போதுள்ள பேருந்துச் சேவைகளின் தரம் தொடர்பில் பொதுமக்களின் திருப்தித்தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் மற்றும் அதன் பிரகாரம் பொதுமக்கள் எதிர்பார்க்கும் தரமிக்க பேருந்துச் சேவையினை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் பயணிகளின் கருத்துக் கணிப்பு ஆய்வுகள் (Passenger Interview Survey), பேருந்துகளின் இயங்கும் நேரத்தினை நிர்ணயிப்பதற்கு மேற்கொள்ளப்படும் பயணநேர கணக்கெடுப்பு (Travel Time Survey) என்பன முக்கியமானவை. 2020ஆம் ஆண்டில் 30 ஆய்வுகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டதுடன், இச்செயற்றிட்டத்திற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஒதுக்கியுள்ள தொகை 5.045 மில்லியன் ரூபாவாகும். 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை 09 ஆவதுடன், அதற்காகச் செலவிடப்பட்ட தொகை 1.22 மில்லியன் ரூபாவாகும். 2020ஆம் ஆண்டில் ஆரம்பித்த கொவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக ஆண்வுகள் மேற்கொள்ளப்பட்டு பெற்றுக் கொண்ட தரவுகள் மூலம் உண்மையான நிலை விஞ்ஞான ரீதியற்றது என்பதால் திட்டமிடப்பட்ட ஆண்வுகள் எண்ணிக்கையினை மேற்கொள்ளுதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன், தொற்றுப் பரவல் காரணமாக பொதுப் போக்குவரத்துப் பேருந்துகளின் தேவையினை இனங்'காணல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புமிக்கதாக பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு எடுக்க வேண்டிய தீர்மானங்களை எடுப்பதற்கு தேவையான தரவுகளைச் சேகரிப்பதற்கு பயணிகளின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் ஆய்வுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டன. 2020ஆம் ஆண்டில் செய்யப்பட்ட வரவு செலவுதிட்டத் திருத்தத்தில் இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 1.8 மில்லியன் ரூபா வரை குறைக்கப்பட்டது.

## 4. தூரப் பயணச் சேவை சமிக்ஞைப் பலகைகள்

மாகாணங்களுக்கு இடையிலான தூரப்பயணச் சேவை பேருந்துகள் எல்லா பேருந்துத் தரிப்பிடங்களிலும் நிறுத்தி குறுகிய தூரப் பயணிகளையும் ஏற்றிச் செல்வதால் மாகாணத்தினுள் ஓடும் குறுகிய தூரம் ஓடும் பேருந்துச் சேவைகளுடன் ஏகொள்ளும் பாதகமான போட்டியினைத் தடுப்பதற்கு தூரப் பயணச் சேவை பேருந்துகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் இடங்களை அறிமுகப்படுத்தல் இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.



மாகாண வீதிப் பணிகள் போக்குவரத்து அதிகார சபை, இலங்கை போக்குவரத்துச் சபை, பேருந்து உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி கொழும்பிற்குள் பிரவேசிக்கும் 05 பிரதான பிரவேசப் பாதைகளில் இனங்கண்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் சமிக்ஞைப் பலகைகளைப் பொருத்தவேண்டிய இடங்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின், கொழும்பு மாநகர சபையின், இலங்கை போலிசின், உரிய மாகாணப் போக்குவரத்து அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களைக் கொண்ட கமிட்டி மூலம் உடனுக்குடன் பரிசோதனை செய்து மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் இட சமிக்ஜைப் பலகைகள் பொருத்தப்பட வேண்டிய இடங்களை புவியியல் ரீதியாகத் துல்லியமாக இனங்காணுதல் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவக் கமிட்டியின் அறிவுறுத்தல் பிரகாரம் இச்சமிக்ஞைப் பலகைகளைப் பொருத்துதல் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாகச் செய்விப்பதற்கு அவ் அதிகாரசபையுடன் பேச்சுவார்த்தை நடாத்துதல் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதியத்தினால் மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்துமிட சமிக்ஞைப் பலகைகள் தயாரிக்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கியதன் பின்னர் அச்சமிக்ஞைப் பலகைகளை இனங்காணப்பட்ட இடங்களில் நிறுவுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட கலந்துரையாடப்பட்டது. 2020ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்திற்காக 5.13 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், 2020.12.31ஆந் திகதியில் இச்செயற்றிட்டத்திற்காக 0.75 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டில் செய்யப்பட்ட வரவு செலவுதிட்டத் திருத்தத்தில் இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 2.5 மில்லியன் ரூபா வரை குறைக்கப்பட்டது.

## 5. நேர அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தி அமைத்தல்

2005 இல 27ஐக் கொண்ட இரங்கைப் போக்குவரத்துச் சபை சட்டத்தினால் திருத்தஞ் செய்யப்பட்ட 1991 இல 37ஐக் கொண்ட தேசிய போக்குவரத்துச் சட்டத்தின் முன்னுரையின் (அ) பந்தியின் பிரகாரம் ‘‘விஞ்ஞான ரீதியாக தீர்மானிக்கப்படும் பொது நேர அட்டவணையொன்றின் கீழ் உண்மையிலேயே பயணிகள் கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கு அனுபவமிக்க பேருந்துச் சேவையொன்று அல்லது தனியார் பேருந்துச் சேவையொன்றினைப் பெற்றுக் கொள்ளல்’’ தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்கு பொது நேர அட்டவணை தயார் செய்யப்படும். இதன் மூலம் தனியார் ரெுந்துகளுக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்துகளுக்கும் இடையில் மற்றும்/அல்லது தனியார் மற்றும் தனியார் பேருந்துகளுக்கு இடையில் மற்றும்/அல்லது இபோச மற்றும் இபோச பேருந்துகளுக்கு இடையில் பயணிக்கும் போது ஏற்படும் பாதகமான போட்டியினைக் குறைத்து ஒவ்வொரு தரப்பிற்கும் குறிப்பிட்ட சந்தைப் பங்கினை ஓதக்கிக் கொடுத்தல் மூலம் சாதகமான போட்டித்தன்மையினை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு நம்பிக்கைமிகு, பாதுகாப்பான பேருந்துச் சேவையொன்றினை வழங்குதல் இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

அதிமேதகு சனாதிபதி அவர்களின் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சமிகு நோக்கு கொள்கை ஆவணத்தின் பிரகாரமும் ‘‘போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்துகள் ஒன்றிணைந்து போட்டித்தன்மையின்றி நியாயமான முறையில் வருமானத்தினை ஈட்டுவதற்கு இயலுமான வகையில் பொது நேர அட்டவணையொன்றின் கீழ் எல்லா பாதைகளுக்கும் நாளொனறுக்கு 24 மணித்தியாலங்களும் செயற்படும் போக்குவரத்துச் சேவையொன்றினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்’’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் 2020ஆம் ஆண்டில் ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் யதாரித்து செயற்படுத்துதல் தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்பட்டது. ஆதன் படி ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரித்தலை துரிதப்படுத்தவதற்கு போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் செயலாளர் அவர்களால் இலங்கைப் போக்குவரத்துச் சபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுஉட்பட்ட நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், மற்றும் போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளரின் தலைமையில் மற்றும் போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளரின் செயலாளராக பணிபுரியும் கமிட்டி ஒன்று நிறுவப்பட்டது. அதன் படி ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரிப்பதற்கு பாதைகளை இனங்காணல் இக்கமிட்டி மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன், முதலில் கொழும்பிற்குள் பிரவேசிக்கும் பிரதான பிரவேசப் பாதைககளின் ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரித்து முடிப்பதற்கு அக்கமிட்டியினால் தீர்மானிக்கப்பட்டது. ஆதன்படி முதல் கட்டமாக கண்டி பிரவேசம் தெரிவுசெய்யப்பட்டதுடன், அதன்படி கண்டி – கொழும்பு சாதாரண சேவையின் மற்றும் கண்டி – பாணந்துறை சேவையின் ஒன்றிணைந்த நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

2020ஆம் ஆண்டில் 30 ஒன்றிணைந்த அட்டவணைகளைத் தயாரித்து செயற்படுத்தவதற்கு திட்டமிடப்பட்டதுடன், அதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2.00 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. எனினும், கோவிட் 19 தொற்று நாட்டினுள் பரவத்தொடங்கயிமையால் பொதுப் போக்குவரத்து பேருந்துச் சேவை சீர்குலைந்தமை, பேருந்துகள் முற்றாக இயங்குவதிலிருந்து நீங்கியமை மற்றும் 2020ஆம் ஆண்டு இறுதி வரையிலும் பொதுப் போக்குவரத்துச் சேவை இயல்பு நிலைக்கு வராமை ஆகியவற்றால் இச்சியற்றிட்டத்தினால் திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைய முடியவில்லை. எனினும் கோவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக ஏற்பட்ட பயணிகள் கேள்வியின் மாற்றத்தின் பிரகாரம் அதுவரை செயற்படுத்தப்பட்ட நேர அட்டவணைகள் புதிய பயணிகள் கேள்வியின் படி திருத்தஞ் செய்யப்பட்டு செயற்படுத்தப்பட்டதுடன், அதன் பிரகாரம் திருத்தஞ் செய்யப்பட்டு செயற்படுத்தப்பட்ட நேர அட்டவணைகளின் எண்ணிக்கை 13 ஆகும். அதன் பிரகாரம் இச்செயற்றிட்டத்திற்காக 2020ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை 0.34 மில்லியன் ரூபாவாகும். 2020ஆம் ஆண்டில் செய்யப்பட்ட வரவு செலவுதிட்டத் திருத்தத்தில் இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 0.5 மில்லியன் ரூபா வரை குறைக்கப்பட்டது.

## 6. பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குதல்

2002 ஆம் ஆணடு முதல் அமுலில் உள்ள பேருந்துக் கட்டணக் கொள்கையின் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வருடாந்தம் பேருந்துக் கட்டணங்களை திருத்தியமைத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இக்கட்டணக் கொள்கையின் படி ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் 01ஆந் திகதியன்று பேருந்துக் கட்டணத் திருத்தியமைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக எரிபொருள் விலை, மொத்த 01 கி.மீற்றரின் ஆகுசெலவு 4மூ அல்லது அதற்கு மேல் அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் மாகாணத்திற்குள்ளேயான பேருந்துக் கட்டணம் திருத்தி அமைக்கப்படும்.

அதன் பிரகாரம், 2020ஆம் ஆண்டில் காணப்பட்ட விலைகளுடன் ஒப்பிடும் போது மொத்த 01 கி.மீஇன் ஆகுசெலவு பேருந்துக் கட்டணங்களைத் திருத்தியமைக்கும் அளவிற்கு போதியதாக இல்லாமையால் 2020 யூலை 01ஆந் திகதி வருடாந்த பேருந்துக் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை. எனினும், கோவிட் தொற்றின் இரண்டாவது அலை காரணமாக சுகாதார அறிவுறுத்தல்களின் பிரகாரம் பொதுப் போக்குவரத்து பேருந்துகளில் உள்ள ஆசன எண்ணிக்கைக்கு மாத்திரம் பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும் என அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அமைச்சரவை அங்கீகாரத்துடன் பேருந்துகளின் கட்டணம் 2020.11.11ஆந் திகதி முதல் 20மூஆல் அதிகரிக்கப்பட்டது. எனினும், ஆரனத்திற்கு மாத்திரம் பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய பேருந்தச் சேவைகளின் (அரை சொகுசு/ சொகுசு/ அதி சொகுசு) பேருந்துக் கட்டணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

ஊவா மாகாணத்தினுள் இயங்கும் இபோச மற்றும் தனியார் பேருந்துச் சேவைகளின் பேரந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குவதற்கு ஊவா மாகாண போக்குவரத்து அதிகார சபை மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு அறிவுறுத்தல்கள் வழங்குதல் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் அவர்கள் பல கட்டங்களின் கீழ் பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குவதற்கு இணங்கியுள்ளனர்.

ஏற்கனவே அமுலில் உள்ள பேருந்துக் கட்டண கொள்கை தற்காலத்திற்குப் பொருந்தும் விதத்தில் இற்றைப்படுத்தவதற்கு தேவையான தரவுகளைச் சேகரிப்பதற்கு 100 பாதைகளில் ஆய்வு நடவடிக்கைகளில் 2020 மார்ச் மாதமாகையில் 09 மேற்கொள்ளப்பட்டதுடன், அதன்பிள்ளர் ஏற்பட்ட கோவிட் தொற்றுப் பரவல் காரணமாக பயணிகள் பேருந்துகளில் பயணிக்கும் இயல்பு நிலைக்கு மாறாமையால் 2020ஆம் ஆண்டினுள் இவ்வாய்வுகளை மேற்கொள்ள முடியாது போயுள்ளது. 2020ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்திற்காக 3.00 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், இச்செயற்றிட்டத்திற்காக 2020ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை 1.75 மில்லியன் ரூபாவாகும். 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுதிட்டத் திருத்தத்தில் இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 1.6 மில்லியன் ரூபா வரை குறைக்கப்பட்டது.

## 7. போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி

வீதிப் பாதுகாப்பு தொடர்பில் பாடசாலை மாணவர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சிகளும் போக்குவரத்துத் திட்டமிடல், நேர அட்டவணைகளைத் தயாரித்தல், அலுவலக முறைமைகள் குறித்து மாகாணப் போக்குவரத்து அதிகார சபைகளின் உத்தியோகத்தர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், பேருந்து இயக்கம், பணிக்குழாத்தினர் முகாமை, பயணிகள் சேவை ஆனமதிப்பத்திர நிபந்தனைகள் தொடர்பில் பேருந்து ஓட்டுனர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், பயணிகள் உரிமை தொடர்பில் பயணிகளை அறிவுறுத்துதலும் பேருந்துச் சாரதிகள் நடத்துனர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன இச்செயற்றிட்டத்தின் கீழ் நடாத்தப்படுகின்றன.

இச்செயற்றிட்டம் நாடு முழுதும் மாகாணங்களை மையமாகக் கொண்டு தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் நடாத்தப்படுவதுடன், தரமான பயணிகள் போக்குவரத்துச் சேவையொன்றினை நிறுவுவதற்கு தேவையான சூழலைத் தயார்படுத்தல் இச்செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

2020ஆம் ஆண்டில் இவ்வாறான 15 அறிவூட்டல் நிகழ்ச்சிகள் செயற்படு நிதிட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பினும் கோவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக 02 நிகழ்ச்சிகளை மாத்திரமே நடாத்த முடிந்தது.

அதன்போது இலங்கைப் போலிசுடன் இணைந்து மேல் மாகாணத்தினுள் மாகாணங்களுக்கு இடையிலான மற்றும் மாகாணத்தினுள் இயங்கும் பேருந்துகளை ஓட்டுவதற்கு பதிவுசெய்துள்ள 2000 சாரதிகளுக்கு வாகன விபத்துக்களைத் தவிர்க்கும் உத்திகள் தொடர்பில் அறிவூட்டப்பட்டது. கொழும்பு, கம்பஹ, களுத்துறை மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

2020ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்திற்காக 5.50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், இச்செயற்றிட்டத்திற்காக 2020.12.31ஆந் திகதியில் செலவிடப்பட்ட தொகை 0.37 மில்லியன் ரூபாவாகும். 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுதிட்டத் திருத்தத்தில் இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 0.5 மில்லியன் ரூபா வரை குறைக்கப்பட்டது.









## 8. தகவல் தொழில்நுட்பத் தொகுதி

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்ப அலகினால் நிறுவனத்தின் வன்பொருள் மற்றும் மென்பொருள் தொகுதிகளை அபிவிருத்தி செய்தல், நிறுவுதலும் நிறுவனத்தின் நடவடிக்கைகளை எளிதாக்குவதற்கு தேவையான தொழில்நுட்ப தலையீட்டினை மேற்கொள்ளுதல் இவ்வலகின் பிரதான பொறுப்பு ஆகும். இத்தவல் தொழில்நுட்ப அலகின் ஊடாக மெல்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் பல காணப்படுவதுடன், அச்செயற்றிட்டங்களின் 2020ஆம் ஆண்டிற்கான முன்னேற்றம் கீழ்வருமாறு.

### 8.1 நிறுவனச் செயற்பாடுகளை தன்னியக்கமயப்படுத்தல் செயற்றிட்டம்

அலுவலகச் செயற்பாடுகளைத் தன்னியக்கமயப்படுத்தல் கணினி மென்பொருள் ஒன்றின் ஊடாக மேற்கொள்ளுதல் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும். இச்செயற்றிட்டத்தின் போது நிறுவனத்தில் காணப்படும் இயக்கம், திட்டமிடல், தரப் பாதுகாப்பு ஆகிய திணைக்களங்களில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை இனங்கண்டு அச்செயற்பாடுகளை தன்னியக்கமயப்படுத்தல் 03 பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. ஆதன் மூலம் பொதுமக்களுக்கு துரித சேவையொன்றினை பெற்றுக் கொடுப்பதற்கும் நிறுவனத்தின் கோப்புக்களை மின்னணு முறைமை ஊடாக மேற்கொள்வதன் மூலம் நம்பிக்கைமிகு பாதுகாப்புமிக்க வினைத்திறன்மிக்க முறைமையொன்றினை நிறுவுவதும் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும். இந்த ஒவ்வொரு தொகுதியும் செயற்படும் போது இத்தொகுதிகள் ஊடாக செயற்பாடுகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களை இச்செயற்றிட்டத்திற்கு இசைவாக்கஞ் செய்தல் மற்றும் பயனர்களுக்கு வசதிமிக்கதாக (User Friendly) அத்தொகுதிகளைக் கையள்வதற்கு தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் இச்செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2020ஆம் ஆண்டில் இந்த மென்பொருளினை மிகவும் சீராகப் பயன்படுத்தவதற்கு தேவையான அவ்வத் திணைக்களங்களினால் கோரியுள்ள திருத்தங்கள் (Changes) மேற்கொள்வதற்கு கூடிய காலம் எடுத்தது. ஆவ்வாறே பயணிகள் வேை அனுமதிப்பத்திரத்திற்குப் பதிலாக NFC அட்டையொன்றை வெளியிடுவதற்கும் 2020ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 8.2 கூகள் தொழில்நுட்பத்தின் ஊடாக பொதுப் போக்குவரத்துச் சேவையினை இனங்காணுதல் (GTFS)

கூகள் வரைபடத்தினுள் பொதுப் போக்குவரத்துச் சேவையினை உட்படுத்துதல் 2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன் அச்செயற்றிட்டத்தின் இன்னொரு நீட்டிப்பாக எல்லா மாகாணப் போக்குவரத்து அதிகாரச் சபைகளினதும் பேருந்துப் பயணப்பாதைகள் இச்செயற்றிட்டத்தினுள் உட்புகுத்துவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டதாயினும் இந்த கோவிட் 19 சவாலை முன்னிட்டு தொற்றுப் பரவல் நிலைமையில் 2020ஆம் ஆண்டினுள் திட்டமிடப்பட்ட இலக்கினை நோக்கிச் செல்லமுடியாது போயினும் தென் மாகாணப் போக்குவரத்து அதிகாரச் சபையின் எட்டு பாதைகள் கூகள் வரைபடத்தினுள் உட்புகுத்தப்பட்டதுடன், எல்லா போக்குவரத்து அதிகார சபைகளையும் அழைப்பித்து இப்பாதைகள் தகவல்களை கூகள் வரைபடத்தினுள் உட்புகுத்தும் விதம் தொடர்பில் ஒரு நாள் பயிற்சியொன்று வழங்கப்பட்டது.


2019ஆம் ஆண்டிற்குரியதாக 2020ஆம் ஆண்டில் தகவல் தொடர்பாடல் மற்றும் தொடர்பாடல் பிரதிநிதித்துவ நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட ஈ ஸ்வாபிமானீ விருது வழங்கல் விழாவில் இச்செயற்றிட்டத்திற்கு பொதுமக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் பிரிவின் கீழ் விருது வழங்கப்பட்டது.





## 8.3 Mybussl Application வெளியீடு

எல்லா பயணிகளும் பயன்படுத்தக்கூடிய Mybus App வெளியீட்டினை 2020ஆம் ஆண்டில் மேற்கொண்டமை தகவல் தொழில்நுட்பப் பிரிவிற்கு கிடைத்த மிகச்சிறந்த வெற்றியாகும்.

ஜீபீஎஸ் தொழில்நுட்பத்தின் ஊடாக தமக்கு தேவையான பேருந்து உள்ள இடத்தை இனங்காணுதல், பேருந்துகளின் நேர அட்டவணைகள் மற்றும் பேருந்துக் கட்டணங்களை அறிந்துகொள்ள இயலுமாதல், இந்த ஆப் ஊடாக ஆசனங்களை ஒதுக்கும் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது மட்டுமன்றி பயணிகளின் முறைபாடுகள், மற்றும் விசாரணைகளையும் இந்த ஆப் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான வசதிகளை அளித்திருத்தல் போன்ற அம்சங்கள் இந்த ஆப் இனால் செய்ய இயலுமாயுள்ளது.



## 8.4 பேருந்துகளில் GPS பொருத்துதல்



2020ஆம் ஆண்டாகையில் GPS அலகின் ஊடாக 1400 பேருந்துகள் முறைப்படுத்தப்பட்டதுடன், அதி சொகுசு மற்றும் சொகுசு பேருந்துகள் அனைத்திலும் GPS பொருத்துதல் முடிவுற்றுள்ளன. அரை சொகுசு பேருந்துகளில் 60மூஇற்கு 2020ஆம் ஆண்டாகையில் GPS பொருத்தப்பட்டதுள்ளதுடன்,

அப்பேருந்துகள் நாளாந்தம் கட்டுப்பாட்டுக் கூடத்தினூடாக முறைப்படுத்தப்படும். Mybussl App ஊடாக GPS பொருத்தப்பட்டுள்ள எல்லா பேருந்துகளும் தொடர்பில் நேரடித் தகவல்கள் பேருந்துப் பயணிகளால் பார்த்துக்கொள்ளும் வசதி 2020ஆம் ஆண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

2020ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப செயற்றிட்டத்திற்காக 23.0 மில்லியன் ரூபாவும் GPS உபகரணங்களைப் பொருத்துதல், பராமரிப்பு நடவடிக்கைகள், கட்டுப்பாட்டுக் கூடத்தினைப் பேணுதல் அகியவற்றிற்கு 8.13 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டதுடன், 2020.12.31 ஆந் திகதியில் இச்செயற்றிட்டத்திற்காக முறையே 1.34 மி.ரூபா மற்றும் 6.64 மி. ரூபா செலவிடப்பட்டுள்ளன. 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுதிட்டத் திருத்தத்தில் இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை முறையே 5.0 மி.ரூபா மற்றும் 6.9 மி.ரூபா வரை குறைக்கப்பட்

## 9. பிரீபெய்ட் அட்டை முறை (Electronic Fare Collection)

இலங்கை மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய அட்டைத் திட்டத்தின் கீழ் (JCB அட்டை) போக்குவரத்தின் போது பயன்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட இணையத்தள வழி மூலமான பிரீபெய்ட் அட்டையொன்றினைச் செயற்படுத்துவதற்குத் தேவையான டீயஉமநனெ மென்பொருளைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் முறையான பெறுகை நடவடிக்கையொன்றின் கீழ் உரிய மென்பொருளைத் தயாரிப்பதற்காக பொருத்தமான நிறுவனமொன்றினைத் தெரிவுசெய்தல் மேற்கொள்ளப்பட்டது.

இச்செயற்றிட்டத்திற்காக 25.00 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், 2020ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்திற்காகச் செலவிடப்பட்ட தொகை 0.15 மில்லியன் ரூபாவாகும். 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுதிட்டத் திருத்தத்தில் இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 2.00 மில்லியன் ரூபா வரை குறைக்கப்பட்டது.

## 10. பொதுமக்கள் முறைபாடுகள்

தரமான பயணிகள் போக்குவரத்தொன்றினை பயணிக்கும் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு பொதுப் போக்குவரத்துச் சேவையின் நடத்தையினை மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்ககூடிய ஊடகம் இச்சேவைகளைப் பெறும் பொதுமக்களின் பின்னூட்டமாகும்.

ஆதன் படி பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் அவர்கள் பெற்றுக்கொண்ட சேவை தொடர்பில் அப்பேருந்துகளின் ஊழியர் குழுவினரின் நடத்தை குறித்து யாதாயினும் சிக்கல்மிகு நிலை ஏற்படின் அது தொடர்பில் முறைபாடு செய்வதற்கு பிரத்தியேகமான பொதுமக்கள் முறைபாட்டு அலகொன்று நிறுவனத்தினுள் நிறுவப்பட்டுள்ளது. அதில் 24 மணித்தியாலங்களும் 07 நாட்களும் செயற்படும் விதத்தில் துரித அழைப்பு அலகின் ஊடாக பேருந்துச் சேவைகளுக்கான முறைபாடுகள் பெற்றுக் கொள்ளப்படுவதுடன், அம்முறைபாடுகள் இச்சந்தர்ப்பத்தின் போதே முறைபாட்டு விசாரணை அலகிற்கு அனுப்பிவைக்கப்படும். முறைபாடுதன்னியக்கத் தொகுதியில் சேர்க்கப்பட்டுடன் முறைபாட்டாளரின் கைத்தொலைபேசிக்கு குறுந்தகவல் ஊடாக முறைபாட்டிற்குரிய விசாரணை இலக்கம் அனுப்பிவைக்கப்படும்.

இவ்வாறு கிடைக்கப் பெறும் முறைபாடுகளுளளில், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவைகளுக்குரிய முறைபாடுகள் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிலேயே விசாரணை செய்யப்படுவதுடன், மாகாண அதிகார சபைக்குரிய பேருந்துகளின் முறைபாடுகளை உரிய மாகாண அலுவலகங்களுக்கு அனுப்பப்படும். அவ்வாறே இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்துகளின் முறைபாடுகள் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

துரித தொலைபேசி அழைப்பு அலகின் ஊடாக முறைபாடுகளை முன்வைப்பதற்கு மேலதிகமாக கடிதம் மூலம், பெக்ஸ் ஊடாக, மின்னஞ்சல் ஊடாக மற்றும் mybussl App ஊடாக இம்முறைபாடுகளை முன்வைத்தல் மேற்கொள்ளப்படும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகள் தொடர்பில் அனுப்பப்படும் எல்லா முறைபாடுகளும் நன்கு பரிசீலிக்கப்படுவதுடன், அம்முறைபாட்டின் தன்மையைப் பொறுத்து எச்சரிக்கை செய்தல், ஊழியர் சேவையினை இடைநிறுத்துதல், நிர்வாகக் கட்டண அறவீடு போன்ற நடவடிக்கைகளும் அனுமதிப்பத்திர பயணமுறைகளை இடைநிறுத்துதல் மற்றும் சில சந்தர்ப்பங்களில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்தலும் மேற்கொள்ளப்படும்.

2020ஆம் ஆண்டில் கோவிட் 19 நிலை காரணமாக பொதுப் போக்குவரத்துச் சேவைகள் உரிய முறையில் செயற்படாமையால் ஏனைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் முறைபாடுகள் குறைவாகக் கிடைத்துள்ள நிலை காணப்படுகின்றது. 2020ஆம் ஆண்டிற்குரிய முறைபாடுகளின் எண்ணிக்கை ரீதியிலான தகவல்கள் அட்டவணை பின்வருமாறு.

| ஆண்டு | | **2020** | |
|---|---|---|---|
| தொ. இல | விபரம் | முறைபாடுகளின் எண்ணிக்கை | வீதமாக % |
| 01 | அதிகரித்த கட்டண அறவீடு/மீதிப் பணத்தைக் கொடுக்காமை | 595 | 13 |
| 02 | பிரயாணிகளுடன் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளுதல் | 710 | 16 |
| 03 | அளவுக்கு அதிகமான பிரயாணிகளை ஏற்றுதல் | 304 | 7 |
| 04 | முறையாகப் பயணச்சீட்டுக்களை வழங்காமை | 525 | 12 |
| 05 | கவனயீனமாக வண்டியை ஓட்டுதல் | 433 | 10 |
| 06 | வீதி அனுமதிப்பத்திரமின்றி ஓட்டுதல் | 71 | 2 |
| 07 | இடைப்பட்ட இடங்களில் தேவையின்றி பேருந்தினை நிறுத்தி பயணிகளை ஏற்றுதல் | 441 | 10 |
| 08 | குறிக்கப்பட்ட நேர அட்டவணையை மீறுதல் | 40 | 1 |
| 09 | குறிப்பிட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்காமை மற்றும் முடிவிடம் வரை போகாமை | 280 | 6 |
| 10 | பேருந்து பயணிகள் போக்குவரத்திற்கு பொருத்தமான நிலையில் இல்லாமை | 101 | 2 |
| 11 | குளிரூட்டிகள் ஒழுங்கான முறையில் இயங்காமை | 44 | 1 |
| 12 | கூடிய சத்தத்தில் ஒலிப்பதிவு நாடா/ வானொலியை இயக்குதல்/ பொருத்தமற்ற வீடியோ காட்சிகள் | 388 | 9 |
| 13 | பயணிகள் போக்குவரத்துப் பேருந்துகளுக்கு இடையில் சச்சரவு | 233 | 5 |
| | **மொத்தம்** | **4464** | |

மூலம்- தரப்பாதுகாப்பு மற்றும் வெளி தொடர்புகள் திணைக்களம், தேபோஆ

2020ஆம் மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் பயணிகள் முகங்கொடுத்த பல்வேறு பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு 4464 முறைபாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் அநேகமான முறைபாடுகள் பயணிகளிடம் முரட்டுத்தனமாக நடந்துகொண்டமை தொடர்பிலானவையே கிடைத்துள்ளன. எண்ணிக்கையில் 710 முறைபாடுகள் ஆகும்.

குடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது குறைந்த பெறுமானத்தினைக் கொண்டிருப்பினும் கோவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக பொதுப் போக்குவரத்து பேருந்துகள் இயங்காமையால் இந்த குறைவான பெறுமானம் பதிவாகியுள்ளமை தெளிவாகின்றது.

இவ்வெல்லா முறைபாடுகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பேருந்து உரிமையாளர்களுக்கு, ஊழியர் குழாத்தினருக்கு எச்சரிக்கை செய்தல், நிர்வாகக் கட்டணம் அறவிடுதல், பயிற்சிகளுக்கு அனுப்புதல், பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை இடை நிறுத்துதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.


## 11. நிறுவனச் சீர்த்திருத்தங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

மூலதனச் செயற்றிட்டத்தின் கீழ் செயற்படும் இச்செயற்றிட்டத்தில் கீழ் குறிப்பிட்டுள்ள செயற்றிட்டங்கள்/ பணிகள் உள்ளடங்குகின்றன. அதாவது,

### 11.1 பேருந்துத் தரிப்பிடங்களைக் கட்டுதல் மற்றும் நவீனமயப்படுத்துதல்

2020ஆம் ஆண்டில் பேருந்துத் திரிப்பிடங்களைக் கட்டுதல் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததுடன், பேருந்து ஊழியர்களின் உள, உடல் சோர்வினைப் போக்கிக்கொள்வதற்கு நவீனமயப்படுத்தப்பட்ட கொள்கலன்களைப் பயன்படுத்தி பெஸ்ரியன் மாவத்தை வளவில் ஓய்வறைகளை நிறுவுதல் மேற்கொள்ளப்பட்டது. இவ் ஓய்வறைகள் 2020ஆம் ஆண்டில் முதல் காலாண்டினுள் பேருந்து ஊழியர்களுக்கு பாவனைக்காக சந்தர்ப்பம் அளிக்கப்படினும் கோவிட் 19 தொற்றுப் பரவல் அதிகரித்தமை காரணமாக மீண்டும் அறிவிக்கும் வரை பாவனை இடைநிறுத்தப்பட்டது.







### 11.2 தேபோஆ கட்டடங்களைப் புதுப்பித்தல்

2020ஆம் ஆண்டினுள் திட்டமிடப்பட்ட கட்டடப் புதுப்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்ததுடன் கோவிட் 19 தொற்றுப் பரவல் ஏற்பட்டமையினால் அந்நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன், 2020ஆம் ஆண்டு இறுதி வரையிலும் ஆரம்பிப்பதற்கு முடியாது போனமையால் எதிர்வரும் ஆண்டினுள் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 11.3 மின்சாரத்தினைச் சிக்கனப்படுத்துவதற்காக நிறுவனத்தினுள் மாற்று மின் உற்பத்தி (சூரிய பேனல்கள்)


இச்செயற்றிட்டத்தின் போது சூரிய பேனல்களைப் பொருத்துவதற்கு பொருத்தமான முறையில் கூரையினைத் தயார் செயடதல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இச்செயற்றிட்டமும் கோவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக 2021ஆம் ஆண்டு வரையில் பிற்போடப்பட்டது.

- பெஸ்ரியன் மாவத்தை மற்றும் வவுனியா பேருந்துத் தரிப்பிடத் தொகுதிகளைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள்
- பெஸ்ரியன் மாவத்தை பேருந்துத் தரிப்பிடத்தில் அங்கவீனப் பிரஜைகளுக்கு வசதிகளை வழங்குதல்

இவ்விரு செயற்றிட்டங்கள் தொடர்பிலும் திட்டமிடல் நடவடிக்கைகள் கோவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக 2021ஆம் ஆண்டு வரையில் பிற்போடப்பட்டன. இச்செயற்றிட்டத்திற்காக 26.85 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், 2020.12.31ஆந் திகதியில் செலவிடப்பட்ட தொகை 0.89 மில்லியன் ரூபாவாகும். 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுதிட்டத் திருத்தத்தில் இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 4.5 மில்லியன் ரூபா வரை குறைக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக மீண்டெழும் செயற்றிட்டங்களின் கீழ் பெஸ்ரியன் மாவத்தை மற்றும் வவுனியா பேருந்துத் தரிப்பிடத் தொகுதிகளில் மேற்கொள்ளப்படும் பேரந்து இயக்க செயற்பாடுகளைக் கண்காணித்தலும் ஏற்பட்ட கோவிட் 19 தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளை முறைப்படுத்தலும் பேருந்துத் தரிப்பிடத் தொகுதியினைப் பேணுவதும் மிகவும் உயர்ந்த மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

## 12. மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்

| தொடரிலக்கம் | சேவை வகை | பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சாதாரண | 1,937 |
| 2 | அரை சொகுசு | 601 |
| 3 | சொகுசு | 426 |
| 4 | அதி சொகுசு | 105 |
| | மொத்தம் | 3,069 |





மூலம் - இயக்கம் மற்றும் சேவைக் கண்காணிப்புத் திணைக்களம்

## 13. நடமாடும் சோதனையிடல்கள் மற்றும் விசாரணை


1971 இல 37ஐக் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்து தனியார் பேருந்துகளிற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது. அவ்வனுமதிப்பத்திரத்தின் கீழ் பயணிக்கும் பேருந்து தொடர்பில் நிபந்தனைகள் தொடரொறொன்று ஆணைக்குழுவினால் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்நிபந்தனைகளின் பிரகாரம் பேருந்துகளைச் செயற்படுத்துதல் குறித்து சோதனையிடல் நடமாடும் சோதனைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும். நடமாடும் பரிசோதனைப் பிரிவின் ஊடாக உடனுக்குடன் பரிசோதனை செய்யப்படும் பேருந்துகளில் இனங்காணப்படும் நிபந்தனைகளை மீறுவதற்கு நிர்வாகக் கட்டணங்களை அறவிடுதல், பயிற்சிளுக்கு அனுப்புதல், பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை இடைநிறுத்துதலும் இரத்துச் செய்தலும் என்பன இவ்வலகின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2020ஆம் ஆண்டில் காணப்பட்ட கோவிட் 19 தொற்றுப் பரவல் நிலை காரணமாக நடமாடும் பரிசோதனையில் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துதல் மட்டுப்படுத்தப்பட்டதுடன், அதன் பிரகாரம் 2020ஆம் ஆண்டில் விசாரணை செய்யப்பட்ட நிபந்தனைகளை மீறுதல் எண்ணிக்கை 1084 ஆகும்.


## 14. தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை










இலங்கை மத்திய வங்கி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கைப் போக்குவரத்துச் சபை, இலங்கைப் புகையிரதத் திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை துறைமுக அதிகாரசபை, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் உட்பட போக்குவரத்துடன் தொடர்புடைய நிறுவனமாகிய ஊஜடுவு நிறுவனம் ஆகிய பல நிறுவனங்களிடம் இருந்து தகவல்கள் மற்றும் தரவுகளை ஒன்றுசேர்த்து அத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்து மிகவும் கவர்ச்சிகரமாகத் தயாரிக்கப்படும் ‘தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை’ தொடர்ந்தும் ஒவ்வொரு வருடமும் அச்சிடப்பட்ட நூலாக மும்மொழிகளிலும் வெளியிடப்படுகின்றது.

தரை மார்க்கம், நீர் மார்க்கம், ஆகாய மார்க்கம் ஆகிய மூன்று ஊடகங்களினூடாக மேற்கொள்ளப்படும் போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பிலான தகவல்களை ஒரே இடத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் முறைமையொன்றாக ‘தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை’ போக்குவரத்துத் துறையில் உள்ள எல்லா நிபுணர்களினதும் பாராட்டுதல்களைப் பெறும் பெரும் நூலொன்றாக ஆகியுள்ளது. போக்குவரத்து குறித்து ஆய்வு செய்யும், திட்டங்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் போக்குவரத்து தொடர்பில் கற்கை நெறிகளை மேற்கொள்வோருக்கும் இவ்வறிக்கையினை உசாவுதல் அந்நடவடிக்கைகளுக்கு பெரும் உறுதுணையாக அமையும்.

2020ஆம் ஆண்டில் திசெம்பர் மாத இறுதியாகையில் 2018 தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கையின் விநியோக நடவடிக்கைகள் முடிவடைந்ததுடன் 2019ஆம் ஆண்டிற்குரிய அறிக்கையினை வெளியிடும் நடவடிக்கைகள் 90%ஆன அளவு முடிவடைந்துள்ளன. இவ்வறிக்கை நாடு முழுதும் போக்குவரத்து தொடர்பிலான பல்வேறு நிறுவனங்கள், பொது நூலகங்கள், பிரதான பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்கு விநியோகிக்கப்படுவதுடன், உயர் கல்வி நடவடிக்கைகளுக்காக கோரும் எவருக்கும் பெற்றுக் கொடுக்கப்படும்.

2020ஆம் ஆண்டில் இதற்காக 2.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், 2020.12.31ஆந் திகதியாகையில் இச்செயற்றிட்டத்திற்காக 0.11 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுதிட்டத் திருத்தத்தில் இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 1.5 மில்லியன் ரூபா வரை குறைக்கப்பட்டது.

## 15. ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஊழியர் குழுவினரை பல்வேறு பாடவிதானங்கள் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நெறிகளுக்கு அனுப்புவதன் மூலம் நிறுவனத்திற்கு தேவையான அறிவு மற்றும் திறன்களைக் கொண்ட ஊழியர் குழுவொன்றை நிர்மாணிக்கப்பதற்கு இச்செயற்றிட்டத்தினால் எதிர்பார்க்கப்படுகின்றது.

2020ஆம் ஆண்டிலும் ஊழியர் குழுவினரை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நெறிகளைக் கற்பதற்காகத் திட்டமிட்டு 2.4 மி. ரூபா ஒதுக்கப்படினும் முதல் காலாண்டு முடிவடையும் முன்னரே கோவிட் 19 தொற்றுப் பரவல் ஏற்பட்டதனால் அலுவலகங்களை முடியமையும் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் காரணமாக உரிய பயிற்சி நெறிகளை நடாத்துவதற்கு அரசு தடைசெய்தமையாலும் பயிற்சி நெறிகளுக்கு அலுவலர்களை அனுப்புதல் மேற்கொள்ளப்படவில்லை. 2020ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுதிட்டத் திருத்தத்தில் இச்செயற்றிட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 2.4 மி. ரூபா தொகையினை வேறொரு செயற்றிட்டத்திற்கு அனுப்பப்பட்டது.

## 16. கோவிட் 19 தொற்றுப் பரவல் காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

2020ஆம் ஆண்டில் மார்ச் மாதம் ஏற்பட்ட கோவிட் 19 தொற்றுப் பரவல் நிலை காரணமாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் செயற்படு திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்படாத பல செயற்பாடுகளை மேற்கொள்ள நேரிட்டது. மேலும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகள், ஓடுவது முற்றாக நிறுத்தப்பட நேர்ந்தமை அப்பேருந்துகளின் ஓட்டுனர்களின் வருமான இழப்பிற்கு ஏதுவாகியமையால் அவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக அவர்களால் செலுத்த வேண்டிய விலைமனு கட்டணங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்களை இற்றைப்படுத்தும் கட்டணங்கள், தினசரி குறிப்புப்புத்தகப் பதிவு, நுழைவுக் கட்டணங்கள் ஆகிய எதுவும் முற்றுமுழுதாக வசூலிக்கப்படவில்லை. மேலும், 2020.12.31ஆந் திகிதி முதல் 2020.03.16ஆந் திகதி முதல் அரசு விடுமுறையினைப் பிரகடனப்படுத்தியதுடன், கொழும்பு மற்றும் சனநெருக்கடிமிக்க நகர்களில் இருந்து தத்தமது ஊர்களை நோக்கிச் சென்ற பயணிகளுக்கு அதிவேகப் பாதையில் மற்றும் ஏனைய பேருந்து தரிப்பிடங்களில் இருந்து துரித போக்குவரத்துச் சேவையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டவுடன், பெஸ்ரியன் மாவத்தை மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துத் தரிப்பிடம் மற்றும் பிரதான அலுவலக வளாகத்தைக் கிருமி நீக்கஞ் செய்தல் மற்றும் கைகழுவுதல் ஆகியவற்றிற்கு வசதிகளை ஒழுங்கு செய்தல், 5000.00 ரூபா கொடுப்பனவை பேருந்து ஊழியர் குழுவினர் பெற்றுக்கொள்ளச் செய்வதற்காக பேருந்து ஊழியர் குழுவினரின் பட்டியல்களைத் தயார் செய்து சமூக சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல், ஊரடங்குச்சட்டம் அமுலாக இருந்த காலம் முழுதும் பொதுமக்களால் பொதுப் போக்குவரத்து நடவடிக்கைகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு 1955 துரித தொலைபேசி அழைப்பினை 24 மணித்தியாலங்களாக செயற்படும் வகையில் பேணுதல், ஆபத்து குறைந்த மாவட்டங்களில் ஊரடங்குச்சட்டம் யாதாயினும் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு தளர்த்துவதாக அரசு எடுத்த தீர்மானத்துடன் சுகாதார ஆலோசனைகளின் பிரகாரம் சமூக இடைவெளியினைப் பேணி (ணுபை □ணுயப முறையில்) பொதுப் போக்குவரத்துச் சேவையினை மேற்கொள்ளுதல் தொடர்பில் அறிவுறுத்தல்களைத் தயாரித்தல் மற்றும் அந்த அறிவுறுத்தல்களை எல்லா மாகாணப் போக்குவரத்து அதிகார சபைகளுக்கு மற்றும் இபோச விற்கு எழுத்துமூலம் அனுப்புதல், சமூக இடைவெளியினைப் பேணியவாறு பேருந்துகளில் ஆசன எண்ணிக்கைக்கு மாத்திரம் பயணிகளை ஏற்றிச் செல்வதால் தனியார் பேருந்து ஓட்டுனர்களுக்கு சேவையினை மேற்கொண்டுச் செல்வதற்கு முடியாதென பேருந்துச் சங்கத்தினால் விடுக்கப்பட்ட கோரலின் பிரகாரம் சுகாதார அறிவுறுத்தல்களின் படி சாதாரண பேருந்துச் சேவைகள் பேருந்துகளின் ஆசன எண்ணிக்கைக்கு மாத்திரம் பயணிகளை ஏற்றிச் செல்வதால் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு ஏற்படும் இழப்பினைக் குறைப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் சாதாரண சேவை பேருந்துக் கட்டணத்தை 20மூஆல் அதிகரித்தல், பொதுப் போக்குவரத்து பேருந்துகளில் பயணிகள் பயணிக்கும் போது பின்பற்ற வேண்டிய சுகாதார ஆலோசனைகளை உள்ளடக்கிய ஊனுஇ னுஏனு என்பன அச்சிடப்பட்டு பேருந்துகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான பணிகளை ஆரம்பித்தல், பேருந்தினுள் பேருந்து வெளியிலும் சுகாதார ஆலோசனைகளைக் காட்சிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

# வருடாந்தக் கணக்கு

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

*இலங்கை ரூபாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது*

### திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2020 | 2019 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதி , உபகரணங்கள் | 4 | 405,037,914.34 | 431,237,126.24 |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணிகள் | | 30,502,154.10 | 30,674,726.89 |
| நூலகப் புத்தகங்கள் | | 1,269,973.81 | 1,269,973.81 |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | 436,810,042.25 | 463,181,826.94 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| கிடைக்க வேண்டியவை, வைப்புக்கள், முற்பணம் | 5 | 11,155,660.60 | 6,082,105.22 |
| பணிக்குழாத்தினர் கிடைக்க வேண்டியவை | 6 | 25,902,340.00 | 24,378,163.00 |
| தவணை வைப்புக்களில் முதலீடுகள் | 7 | 42,053,092.41 | 38,317,490.30 |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடுகள் | 8 | 14,935,680.00 | 13,823,174.00 |
| கிடைக்க வேண்டிய வட்டி | | 2,593,962.78 | 3,543,592.69 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 9 | 517,262,715.21 | 532,294,890.61 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **613,903,451.00** | **618,439,415.82** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,050,713,493.25** | **1,081,621,242.76** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| அரசாங்க மானியங்கள் | 10 | 243,505,851.02 | 267,821,299.86 |
| இளைப்பாற்று நலன் கடப்பாடுகள் | 11 | 53,133,450.00 | 45,668,232.50 |
| **மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | **296,639,301.02** | **313,489,532.36** |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| செலுத்த வேண்டியவை | 12 | 1,870,484.93 | 62,552,668.92 |
| மீளச் செலுத்தவேண்டிய கேள்விப்பத்திர வைப்புக்கள் | | 57,231,404.00 | 59,703,404.00 |
| ஏற்பாடுகள் மற்றும் சேர் செலவினங்கள் | 13 | 109,132,088.18 | 39,141,068.79 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **168,233,977.11** | **161,397,141.71** |
| திரண்ட மிகைகள் /(குறைநிலைகள்) | | **585,840,215.12** | **606,734,568.69** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,050,713,493.25** | **1,081,621,242.76** |

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள், இலங்கை அரசாங்கப் பிரிவின் கணக்கீட்டு நியமங்களின் (SLPSAS)பிரகாரம் தாயரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படுகின்றது.

**பணிப்பாளர் (நிதி மற்றும் பெறுகை)**

05 முதல் 08 வரையிலான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 09 முதல் 15 வரையிலான பக்கங்களில் உள்ள குறிப்புக்கள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.

இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இந்நிதிக்கூற்றுக்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, அவர்களின் சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளது.

.............................. ..............................

**தலைவர்** **ஆணைக்குழு உறுப்பினர்**

**திகதி: 25.02.2021.**

**அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.**

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

*இலங்கை ரூபாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது*

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றுகைக் கூற்று | குறிப்பு | 2020 | 2019 |
|---|---|---|---|
| **வருவாய்** | | | |
| வருவாய் | **14** | 194,374,241.20 | 410,966,074.21 |
| ஏனைய வருமானம் | **15** | 59,158,570.54 | 68,912,998.09 |
| **மொத்தம்** | | **253,532,811.74** | **479,879,072.30** |
| **செலவினங்கள்** | | | |
| **தொழிற்படு செலவுகள்** | **16** | | |
| ஆளணி ஊதியங்கள் | **16.1** | 155,120,686.63 | 152,466,003.42 |
| போக்குவரத்து | **16.2** | 12,870,202.08 | 17,686,303.64 |
| விசேட கமிட்டி கொடுப்பனவுகள் | | - | 39,000.00 |
| பயணச் செலவுகள், பிழைப்பூதியக் கொடுப்பனவு | **16.3** | 1,500,474.75 | 3,791,447.98 |
| நிறுவனச் செலவுகள் | **16.4** | 39,204,838.02 | 49,423,879.68 |
| நிலையான சொத்துக்களின் புதுப்பித்தல்களும் பாரமரிப்பும் | **16.5** | 2,377,177.37 | 2,987,729.82 |
| ஊழியர் நலன்புரி | **16.6** | 7,086,600.54 | 12,209,422.63 |
| பதவியணியினர் அபிவிருத்தி | **16.7** | 632,618.72 | 1,148,026.35 |
| சட்ட மற்றும் பிற கட்டணங்கள் | **16.8** | 1,328,549.00 | 2,689,811.00 |
| தகவல்கள் | **16.9** | 759,279.00 | 1,119,008.75 |
| தேய்மானம் | **16.10** | 26,955,712.19 | 25,290,793.67 |
| நிதிசார் கட்டணங்கள் | **16.11** | 39,174.18 | 51,186.52 |
| ஏனைய செலவினங்கள் | **16.12** | 1,699,189.90 | 447,151.50 |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | | **249,574,502.38** | **269,349,764.96** |
| **ஆண்டிற்கான தொழிற்பாட்டு மிகை/ '(குறைநிலை)** | | **3,958,309.36** | **210,529,307.34** |
| **தொழிற்பாடற்ற வருவாய்** | **17** | **15,430.00** | **40,175.00** |
| **ஆண்டிற்கான தேறிய மிகை/'(குறைநிலை)** | | **3,973,739.36** | **210,569,482.34** |
| **அரசாங்க மானியங்கள்** | | | |
| **கருத்திட்டங்களுக்கான அரச மானியங்கள்** | **18** | **401,999,970.00** | **581,750,000.00** |
| **அரசாங்க மானியங்கள் மீதான விசேட கருத்திட்ட செலவினங்கள்** | **19.1** | **(401,999,970.00)** | **(581,750,000.00)** |
| **NTC நிதிகள் மீதான விசேட கருத்திட்டச் செலவுகள்** | **19.2** | **(24,868,092.93)** | **(38,055,450.36)** |
| **ஆண்டிற்கான தேறிய மிகை/'(குறைநிலை)** | | **-20,894,353.57** | **172,514,031.98** |

**அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.**

**2020 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள்/ உரிமையாண்மை மாற்றங்கள் கூற்று**

| | திரண்ட மிகைகள்.:. (பற்றாக்குறைகள்) |
|---|---|
| **2016 ஜனவரி 01ஆந் திகதியில் மீதி** | 434,220,536.71 |
| ஆண்டிற்கான மிகை/பற்றாக்குறை | 172,514,031.98 |
| **2019 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி** | 606,734,568.69 |
| திறைசேரிக்கு மீண்ட நிதிகள் | - |
| ஆண்டிற்கான மிகை/பற்றாக்குறை | (20,894,353.57) |
| **2020 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி** | 585,840,215.12 |

**அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.**

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று | குறிப்பு | 2020 | 2019 |
|---|---|---|---|
| **தொழிற்படு நடவடிக்கைகள் மூலமாக காசுப்பாய்ச்சல்** | | | |
| ஆண்டிற்கான மிகை/(குறைநிலை) | | (20,894,353.57) | 172,514,031.98 |
| **காசு இல்லா அசைவுகள்** | | | |
| தேய்மானம் | | 26,955,712.19 | 25,290,793.67 |
| சொத்துக்களின் அகற்றுகை | | (15,430.00) | (40,175.00) |
| அரசாங்க மானியங்கள் மீதான கடன்கரைப்பு | | (24,315,448.84) | (27,229,632.11) |
| ஆண்டிற்கான பணிக்கொடைக் கட்டணங்கள் | | 9,162,857.50 | 7,744,054.50 |
| வட்டி வருமானம் | | (34,843,121.70) | (41,683,365.98) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் செயற்படு மிகை/(குறைநிலை)** | | **(43,949,784.42)** | **136,595,707.06** |
| **தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள்** | | | |
| கிடைக்க வேண்டியவை, வைப்புக்கள், முற்பணம் | | (5,073,555.38) | (2,308,620.91) |
| பணிக்குழர்த்தினர் கிடைக்க வேண்டியவை | | (1,524,177.00) | (1,515,388.00) |
| வட்டி கிடைக்கவேண்டியவை | | 949,629.91 | (117,410.72) |
| செலுத்த வேண்டியவை | | (60,682,183.99) | (796,236.12) |
| மீளச் செலுத்தவேண்டிய கேள்விப்பத்திர வைப்புக்கள் | | (2,472,000.00) | (6,015,500.00) |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | | 69,991,019.39 | 1,771,567.36 |
| **(பயன்படுத்தப்பட்ட) /தொழிற்படு நடவடிக்கைகள் மூலமாக காசு** | | **(42,761,051.49)** | **127,614,118.67** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | | (1,697,640.00) | (2,892,965.00) |
| சொத்துக்களின் அகற்றுகை மூலம் பெறப்பட்ட காசு | | 15,430.00 | 40,175.00 |
| **(பயன்படுத்தப்பட்ட) /தொழிற்படு நடவடிக்கைகள் மூலமாக தேறிய காசுப் பாய்ச்சல்** | | **(44,443,261.49)** | **124,761,328.67** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| காணி,பொறித்தொகுதி மற்றும் கருவிகள் சுவீகரிப்பு | | (756,500.29) | (17,083,417.29) |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை சுவீகரிப்பு | | 172,572.79 | (16,432,846.45) |
| நூலகப் புத்தகங்கள் சுவீகரிப்பு | | - | (92,865.00) |
| திறைசேரி உண்டியல்கள் தவணை வைப்புக்களில் தேறிய முதலீடு | | (4,848,108.11) | (4,543,069.21) |
| வட்டி கிடைப்பனவுகள் | | 34,843,121.70 | 41,683,365.98 |
| **(பயன்படுத்தப்பட்ட) /முதலீட்டு நடவடிக்கைகள் மூலமாக தேறிய காசுப் பாய்ச்சல்** | | **29,411,086.09** | **3,531,168.03** |
| **நிதிசார் நடவடிக்கைகள் மூலமாக காசுப் பாய்ச்சல்** | | | |
| திறைசேரிக்கு மாற்றப்பட்ட நிதிகள் | | - | (50,000,000.00) |
| **(பயன்படுத்தப்பட்ட) /நிதிசார் நடவடிக்கைகள் மூலமாக தேறிய காசுப் பாய்ச்சல்** | | **-** | **(50,000,000.00)** |
| **ஆண்டிற்குள் காசும் காசுக்கு சமமானவையில் உள்ள தேறிய மாற்றங்கள்** | | **(15,032,175.40)** | **78,292,496.70** |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும் | | 532,294,890.61 | 454,002,393.91 |
| **வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்** | குறிப்பு 9 | **517,262,715.21** | **532,294,890.61** |

**அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.**

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

**2020 திசெம்பர் 31 இல் முடிந்த ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

# 1. தாபனத் தகவல்கள்

## 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 1991 இல 37 ஐக் கொண்ட தேபோஆ சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் அலுவலகம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறும் பிரதான நிலையம் இல 241, பூங்கா வீதி, கொழும்பு 05இல் அமைந்துள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2020ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிசார் தரவுகள் உள்ளடங்குகின்றன.

## 1.2 பிரதான பணிகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

பயணிகள் பேருந்துகள் மூலம் பயணிக்கும் மக்களுக்கு போக்குவரத்துச் சேவையினை வழங்குதல் மற்றும் பயணிகள் பேருந்துகளுக்கான நிச்சயிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் குறித்து இலங்கை அரசிற்கு ஆலோசனைகளை வழங்குதல் என்பனவே ஆணைக்குழுவின் பணியாகும்.

**1.3** நிதியாண்டின் இறுதியில் ஆணைக்குழு 181 நிரந்தரமான ஊழியர்களையும் ஒப்பந்த அடிப்படையில் 7 ஊழியர்களையும் கொண்டிருந்தது.

## 1.4 அறிக்கையிடும் திகதி

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடும் திகதி திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவுறும்.

## 1.5 வெளியிடுவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட திகதி

- 2021/02/25ஆந் திகதியன்று ஆணைக்குழுவின் அங்கத்தவர்களால் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

# 2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

## 1 தயாரித்தலின் அடிப்படை

அரச மானியங்கள் மற்றும் அரசாங்க நிதி உதவி வெளிப்படுத்தல்கள் கணக்கீடு - LKAS 20-பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க அரச ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு மற்றும் அளவிடப்பட்டுள்ளதுடன், இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் (SLPSASs)பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ரீதியான உடன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் (SLPSASs) பிரகாரம் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சில சிக்கல்மிகு கணக்கீட்டு மதிப்பீடுகள் தேவையாகும். மேலும் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் படிமுறையில் முகாமையானது அதன் தீர்வுகளைப் பயன்படுத்துதல் அவசியமாகும். நிதிசார் கூற்றுக்களுக்கு முக்கியமான எடுகோள்கள் மற்றும் மதிப்பீடுகள் உள்ள பகுதிகள் அல்லது உயர்ந்த அளவில் தீர்மானங்கள் அல்லது சிக்கல்தன்மை கொண்டுள்ள பகுதிகள் குறிப்பு 3இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**2.2 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்**

கீழ் குறிப்பிட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் மாற்றங்கள் வேறு வழியில் குறிப்பிட்டால் ஒழிய நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படும் காலப்பிரிவிற்கு தொடர்ந்தும் பயன்படுத்தப்படும்.

நடப்பு ஆண்டின் விடயங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டு சிறந்த முன்வைப்பிற்காக கடந்த வருடத்தின் நிதிசார் கூற்றறுக்களின் முன்வைத்தல் மற்றும் பகுப்பாய்வு தேவையான இடங்களில் சரிப்படுத்தப்பட்டுள்ளன.

**2.3 வெளிநாட்டு நாணய மாற்றம்**

**2.3.1 தொழிற்படு மற்றும் முன்வைத்தல் நாணய அலகு**

நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவை நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் ஆரம்பப் பொருளாதார சூழலின் படியே அளவிடப்படும். நிதிக் கூற்றுக்கள் ஆணைக்குழுவின் முன்வைத்தல் நாணயமான இலங்கை ரூபாவில் (LKR) முன்வைக்கப்பட்டுள்ளன.

**2.3.2 கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவைகள்**

வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்கள் தொழிற்படு நாணய கொடுக்கல்வாங்கலாக மாற்றப்படுவது கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற தினத்தில் காணப்பட்ட செலாவணி வீதத்தின் அடிப்படையிலாகும்.

**2.4 சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்**

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் என்பன முகாமையினால் எதிர்பார்க்கப்படும் விதத்தில் செயற்படுத்துவதற்கு இயலுமான இடம் மற்றும் அதற்கு தேவையான நிலைமைக்கு சொத்துக்களை கொண்டு வருவதற்கு நேரடியாக மேற்கொள்ளப்படும் செலவினங்கள் உட்பட ஆரம்பத்தில் செலவில் இனங்காணப்படும்.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் மீதான செலவுகளிலிருந்து திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்து வரும் வரலாற்றுச் செலவில் குறிக்கப்படும்.

அச்செலவினால் சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுகாலத்தை நீடிக்க முடிந்தால் அதனால் உருவாகும் இலாபங்கள் தாபனத்திற்கு கிடைத்தாலேயே பிந்திய கால செலவுகள் சொத்துக்களின் காவுகைத் தொகையில் உள்ளடக்கவொ அல்லது சொத்தாகவோ இணங்காணப்படுவதுடன், அவ்வுருபடியின் செலவினை நம்பகமான முறையில் அறவிட முடிகின்றது. தாபனம் ஏனைய சொத்துக்களை நாளாந்தம் பராமரிப்பதற்கும் பேணுவதற்கும் மேற்கொள்ளும் செலவுகள் விபரமான வருமானக் கூற்றில் உரிய காலப்பகுதிக்கான செலவாகக் கருதப்படும்.

காணிகள் பெறுமதி இறக்கஞ் செய்யப்படாததுடன், ஏனைய சொத்துக்களின் தேய்மானம் நேர்கோட்டு முறைமையைப் பயன்படுத்தி கீழே காட்டப்பட்டுள்ளவாறு மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயட்காலத்தினுள் செலவு ஒதுக்கப்பட்டு அளவிடப்படும்.

| சொத்துக்கள் வகை | வருடம் |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 05 ஆண்டுகள் |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 10 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| பல்வேறு உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| கணினிகளும் அச்சு இயந்திரங்களும் | 04 ஆண்டுகள் |
| இயந்திரங்கள் | 05 ஆண்டுகள் |
| கட்டடங்கள் | 20 ஆண்டுகள் |
| இலத்திரனியல் காட்சிப் பலகைகள் (LED) | 03 ஆண்டுகள் |

சொத்தின் காவுகைத் தொகை அதன் மதிப்பிடப்பட்ட மீளப்பெறக்கூடிய தொகையை விடக் கூடுதலாக இருப்பின், அச்சொத்தின் காவுகைத் தொகை உடனடியாக மீளக் கிடைக்கக்கூடிய தொகையில் பதிவு செய்யப்படும்.

நூலகப் புத்தகங்களில் தேய்மானம் வழங்கப்படவில்லை.

**2.5 தவணை வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடுகள்**

தவணை வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் முதிர்வுப் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**2.6 கிடைப்பனவுகள்**

கிடைப்பனவுகள் என்பது பெற்றுக்கொள்ளப்படும் சேவைகளுக்காக செலுத்த வேண்டியுள்ள பணமாகும். கூட்டுத்தொகை சாதாரண தொழிற்படு சுழற்சியில் (ஒரு வருடத்தினுள் அல்லது அதற்குக் குறைவாக) எதிர்பார்க்கப்படுவதுடன், கிடைப்பனவுகள் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். கிடைப்பனவுகளை இனங்காணல் மற்றும் கணிப்பிடல் கொடுக்கல்வாங்கல் செய்யும் பெறுமதியில் இனங்காணப்பட்டு கணிக்கப்படும்.

**2.7 காசும் காசுக்கு சமமானவையும்**

காசுப் பாய்ச்சல் கூற்றில் கையிலுள்ள பணம், வங்கிகளுடனான அழைப்பில் உள்ள தவணை வைப்புக்கள், ஏனைய மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான அசல் முதிர்வுடன் கூடிய குறுங்கால உயர் திரவத்தன்மைக் கொண்ட முதலீடுகள் என்பன காசும் காசுக்கு சமமானவையில் உள்ளடங்குகின்றன.

**2.8 கொடுப்பனவுகள்**

கொடுப்பனவுகள் என்பது வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குனர்களிடம் இருந்துபெற்றுக்கொள்ளும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்குச் செலுத்த வேண்டிய பொறுப்புக்களாகும். கொடுப்பனவு வர்த்தகத்தில் சாதாரண தொழிற்படு வர்த்தக வட்டத்தில் (1 வருடத்தினுள் அல்லது அதற்குக் குறைவாக) மேற்கொள்ளவேண்டிய கொடுப்பனவு எனின், அது நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படும். அவ்வாறு இல்லாவிடின், அவை நடைமுறையற்ற பொறுப்புக்களாக இனங்காணப்படும்.

கொடுப்பனவுகள் வர்த்தகத்தின் சாதாரண தொழிற்படு வட்டத்தில் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதால், ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் விலையில் இனங்காணப்பட்டு பின்னர் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் விலையில் அளவிடப்படும்.

**2.9 அரச மானியங்கள்**

மானியங்கள் கிடைக்கப்பெறும் மற்றும் இணைத்துள்ள நிபந்தனைகளுடன் தள்ளுபடி இணங்கும் என்ற நியாமான உத்தரவாதம் உள்ள நிலையில்,நிதிசாரா மானியங்கள் உட்பட அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் மானியங்கள் அவற்றின் நியாயமான பெறுமதியில் இனங்காணப்படும்.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் தொடர்பிலான அரச மானியங்கள் நடைமுறையற்ற சொத்துக்களில் அரசாங்கத்தின் பிற்போடப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், நிதிசார் செயலாற்றுகைக் கூற்றில் இது இனங்காணப்பட்டிருப்பது உரிய சொத்துக்களில் எதிர்பார்க்கப்பட்டட ஆயட்காலத்தில் எளிய நேர்கோட்டு அடிப்படையிலாகும்.

நிதிசாரா சொத்துக்களில் காவுகைப் பெறுமதியில் மற்றும் காவுகைப் பெறுமதியில் மானியம் மற்றும் சொத்துக்கான கணக்கில்நிதிசாரா மானியங்கள் அளவிடப்படும்.

**2.10 கடன்பெறும் கிரயங்கள்**

நிதிசார் செயலாற்றுகைக் கூற்றில் கடன்பெறும் கிரயங்கள் அவை நடைபெறும் காலத்திற்குள் இனங்காணப்படும்.

**2.11 ஊழியர் நலன்கள்**

ஆணைக்குழு நிலையான நலன்கள் மற்றும் நிலையான பங்களிப்புத் திட்டங்களைக் கொண்டுள்ளது.

(அ) **நிலையான பங்களிப்புத் திட்டம்**

நிலையான பங்களிப்புத் திட்டமானது ஆணைக்குழு நிலையான பங்களிப்புத் தொகையொன்றினைப் பிரத்தியேகமான நிறுவனமொன்றிற்கு செலுத்தக்கூடிய தொழிலுக்குப் பின்னரான நன்மை திட்டமாகும். ஆணைக்குழுவிற்கு கூடுதலான பங்களிப்புத் தொகையொன்றைச் செலுத்தவதற்கு சட்ட அல்லது ஆக்கபூர்வமானபொறுப்பு இல்லை. முதிர்ச்சியடைந்ததன் பின்னர் இப்பங்களிப்புத் தொகை ஊழியர் நன்மை செலவாக இனங்காணப்படும்.

ஆணைக்குழுவினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக(EPF) ஊழியர் ஒருவரின் மொத்த ஊதியத்திலிருந்து 12% பங்களிக்கப்படுவதுடன், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு (ETF) மொத்த ஊதியத்திலிருந்து 3% பங்களிக்கப்படும்.

**(ஆ) நிலையான நலன்கள் திட்டம்**

ஊழியரின் முதல் வருடம் முதல் பணி புரியும் ஒவ்வொரு வருடத்திற்கும் ½ மாதச் சம்பளத்தினை ஊழியர் பணிக்கொடை நிதியத்தில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் 1983 பணிக்கொடை நிதியக் கொடுப்பனவுகள் சட்டத்தின் இல 12இன் பிரகாரம் ஊழியர் ஒருவர் 05 வருடங்கள் தொடர்ந்தும் பணிபுரிவதால் பணிக்கொடை நிதியத்தில் உரிமைப் பெறலாம்.

**(இ) குறுங்கால ஊழியர் நன்மைகள்**

ஊழியர்களினால் நிறைவேற்றப்படும் சேவைகளுக்காக செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தள்ளுபடி தொகை மீதுகுறுங்கால ஊழியர் நலன் பொறுப்புக்கள் அளவிடப்படும்.

**2.12 ஏற்பாடுகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்**

ஆணைக்குழுவிடமிருந்து பொருளாதார வளங்களின் வெளிப்பாய்வு தேவைப்படும் என்பதுடன் நம்பகமான முறையில் பெறுமானத்தினை மதிப்பீடு செய்யமுடியும் என சாத்தியமாகின்ற நிலையில்,கடந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பெறுபேறாக ஆணைக்குழுவிற்கு தற்போதைய சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடுகள் உள்ள போது தொழிற்படு செலவினங்களுக்கான ஏற்பாடுகள் இனங்காணப்படும்.

நடப்புக் கடப்பாடு அல்லது பொறுப்புக்கள் தொடர்புபட்ட இடர்கள் மற்றும் ஐயப்பாடுகள் அறிக்கையிடும் நாளில் காணப்படும் மிகவும் நம்பகமான ஆதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு நடப்புக் கடப்பாடுகளும் பொறுப்புக்களைத் தீர்த்தலிற்கு தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட செலவின் படி ஏற்பாடுகள் கணிக்கப்படும்.

எல்லா எதிர்பாரா பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பொன்றாக தெரிவிக்கப்படாவிடின் வளங்களின் வெளிப்பாய்வின் சாத்தியப்பாடு இல்லாது போகும்.

**2.13 வருவாயை இனங்காணல்**

ஆணைக்குழுவின் நடவடிக்கைகளில் கிடைக்கப் பெற்ற அல்லது கிடைக்க வேண்டிய சலுகைகளின் நியாயமான பெறுமதியில் வருவாய் அளவிடப்படும். வருவாயின் அளவை நம்பகமாகக் கணிப்பிடக்கூடிய சந்தர்ப்பத்தில் மற்றும் எதிர்காலப் பொருளாதார நன்மைகள் ஆணைக்குழுவிற்குள் உட்பாய்தல் சாத்தியமாகும் போதே ஆணைக்குழு வருவாயை இனங்காண்கின்றது.

முக்கியமான ஒவ்வொரு வருவாயினையும் மதிப்பீடு செய்வதற்கு ஆணைக்குழுவினால் வருவாயை இனங்காண்பதற்காகக் கீழ் குறிப்பிட்டுள்ள பிரமாணங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**(அ) அனுமதிப்பத்திர வருவாய்**

எதிர்காலப் பொருளாதார நன்மைகள் ஆணைக்குழுவிற்குள் உட்பாய்தல் சாத்தியமாகும் போது வீதி அனுமதிப் பத்திரங்ககளினால் கிடைக்கும் வருவாய் இனங்காணப்படுகின்றது.

**(ஆ) சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் கருவிகள் என்பவற்றை அகற்றுவதால் ஏற்படும் இலாபம் மற்றும் நட்டம்**

காவுகைத் தொகையுடன் வருவாயினை ஒப்பிடுவதன் மூலம்அகற்றுகைகளால் ஏற்படும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பன தீர்மானிக்கப்படுவதுடன், நிதிசார் செயலாற்றுகைக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

**2.14 செலவினங்கள்**

தொழிற்படும் காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட செலவு என்பது அறிக்கையிடும் காலப்பகுதியில் இலாபமாகக் கிடைக்கும் வருமானமாகும்.

**2.15 அறிக்கையிடும் காலத்தின் பின்னர் ஏற்படும் நிகழ்வுகள்**

அறிக்கையிடும் காலத்தின் பின்னர் ஏற்படும் எல்லா பருப்பொருள் நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்படுவதுடன், நிதிக் கூற்றுக்களில் தேவையான இடங்களில் பொருந்தும் வண்ணம் சீராக்கல்கள் மற்றும் வெளிப்படுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2.16 கடப்பாடுகள்**

அறிக்கையிடும் காலத்தின் இறுதியில் ஏற்படும் எல்லா பருப்பொருள் கடப்பாடுகளும் இனங்காணப்பட்டுள்ளதுடன்,நிதிக் கூற்றுக்களுக்கான் குறிபபுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**3. முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகளும் தீர்வுகளும்**

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முகாமையினால் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு ஆகியவற்றை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்தல் தொடர்பில் பல தீர்வுகள, மதிப்பீடுகள், எடுகோள்கள என்பன பிரயோகிக்கப்படுகின்றன.

சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு ஆகியவற்றின் இணங்கானல் மற்றும் அளவீடு மீது குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தும் மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் தொடர்பிலான தகவல் கீழே தரப்பட்டுள்ளது.

(அ) தேய்வடைந்து செல்லும் சொத்துக்களின் பயன்மிகு ஆயுட் காலம்

முகாமை, சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார பயன்பாட்டின் அடிப்படையில், அறிக்கையிடும் தினத்தில் தேய்வடைந்து செல்லும் சொத்துக்களின் பயன்மிகு ஆயுட் காலத்தின் அதன் மதிப்பீட்டினை மீளாய்வு செய்கின்றது. இம்மதிப்பீடுகளில் உள்ள நிச்சயமற்ற தன்மைக்கு காரணம், குறிப்பிட்ட சில மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உதிரிப்பாகங்களின் பயன்பாட்டினை மாற்றக்கூடிய வழக்கற்று போன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதாகும்.

## 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 4 சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

இறையில் சொத்துக்கள் - செலவு

| இல. | சொத்து வகை | கிரயம் | | | | தேய்மான வீதம் | தேய்மானம் | | | | தேறிய காவுகைப் பெறுமதி 2020 | தேறிய காவுகைப் பெறுமதி 2019 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2020 ஜனவரி 01இல் உள்ளவாறான மீதி | அகற்றுதல் | வருடத்தில் கூட்டல்கள் | 2020 திசெம்பர் 31இல் உள்ளவாறான மீதி | | 2020 ஜனவரி 01இல் உள்ளவாறான மீதி | அகற்றுதல் | வருடத்திற்கான கட்டணம் | 2020 திசெம்பர் 31இல் உள்ளவாறான மீதி | | |
| 1 | காணி | 245,000,000.00 | | - | 245,000,000.00 | - | - | | - | - | 245,000,000.00 | 245,000,000.00 |
| 2 | கட்டடம் | 195,683,739.57 | | - | 195,683,739.57 | 5% | 70,009,732.04 | | 9,348,666.60 | 79,358,398.64 | 116,325,340.93 | 125,674,007.53 |
| 3 | மோட்டார் வாகனங்கள் | 75,547,270.00 | | - | 75,547,270.00 | 20% | 68,709,249.10 | | 420,000.00 | 69,129,249.10 | 6,418,020.90 | 6,838,020.90 |
| 4 | தளபாடங்களும் பொருத்திகளும் | 35,684,150.92 | 330,211.65 | 172,115.50 | 35,526,054.77 | 10% | 23,463,393.33 | 330,211.65 | 2,929,842.60 | 26,063,024.28 | 9,463,030.49 | 12,220,757.59 |
| 5 | அலுவலக உபகரணங்கள் | 25,306,451.13 | | 79,500.00 | 25,385,951.13 | 20% | 13,859,286.95 | | 2,980,320.03 | 16,839,606.98 | 8,546,344.15 | 11,447,164.18 |
| 6 | பல்வேறு உபகரணங்கள் | 8,941,437.55 | | 232,407.00 | 9,173,844.55 | 20% | 4,593,898.42 | | 1,052,040.99 | 5,645,939.41 | 3,527,905.14 | 4,347,539.13 |
| 7 | கணினிகளும் அச்சு இயந்திரங்களும | 67,676,597.93 | | 272,477.79 | 67,949,075.72 | 25% | 41,966,961.02 | | 10,224,841.97 | 52,191,802.99 | 15,757,272.73 | 25,709,636.91 |
| 8 | இயந்திரங்கள் | 1,775,637.00 | | - | 1,775,637.00 | 20% | 1,775,637.00 | | - | 1,775,637.00 | - | - |
| 9 | டிஜிட்டல் காட்சிப் பலகைகள் | 62,415,360.00 | | - | 62,415,360.00 | 33.33% | 62,415,360.00 | | - | 62,415,360.00 | - | - |
| மொத்தம் | | **718,030,644.10** | **330,211.65** | **756,500.29** | **718,456,932.74** | | **286,793,517.86** | **330,211.65** | **26,955,712.19** | **313,419,018.40** | **405,037,914.34** | **431,237,126.24** |

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடரும்

**2020 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

| | | | 2020 | 2019 |
|---|---|---|---|---|
| 5 | **கிடைக்கவேண்டியவை, வைப்புக்கள் மற்றும் முற்பணகள** | | | |
| | கிடைக்கவேண்டியவை, | குறிப்பு 5.1 | 9,032,500.27 | 4,297,274.17 |
| | வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள் | குறிப்பு 5.2 | 2,123,160.33 | 1,784,831.05 |
| | | | **11,155,660.60** | **6,082,105.22** |
| | **5.1 கிடைக்கவேண்டியவை** | | | |
| | வருமானம் கிடைக்கவேண்டியது | | 9,011,594.77 | 3,958,088.00 |
| | தேர்தல் திணைக்களம் | | - | 83,898.00 |
| | ஏனைய கிடைக்கவேண்டியவை | | 20,905.50 | 255,288.17 |
| | | | **9,032,500.27** | **4,297,274.17** |
| | **5.2 வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்** | | | |
| | வைப்புக்கள் | | 686,500.00 | 686,500.00 |
| | செயற்றிட்டங்களுக்கான முற்பணம் | | - | 37,616.00 |
| | முற்பணம் - NTC | | 61,380.00 | 55,000.00 |
| | முன்கூட்டிய கொடுப்பனவு | | 1,375,280.33 | 1,005,715.05 |
| | | | **2,123,160.33** | **1,784,831.05** |
| 6 | **பணிக்குழாத்தினர் கிடைப்பனவுகள்** | | | |
| | இடர்கடன்கள் | | 25,874,140.00 | 23,383,870.00 |
| | இடர்கடனகள் | | - | 214,593.00 |
| | துணிமணிக்கான முற்பணம் | | 20,200.00 | 469,200.00 |
| | பண்டிகை முற்பணம் | | 8,000.00 | 310,500.00 |
| | | | **25,902,340.00** | **24,378,163.00** |
| 7 | **தவணை வைப்புக்களில் முதலீடு** | | | |
| | தவணை வைப்புக்கள் | | 42,053,092.41 | 38,317,490.30 |
| | | | **42,053,092.41** | **38,317,490.30** |

பணிக்கொடைக் கடப்பாடுகளுக்காக ரூபா.41,133,092.41 (2019- 37,397,490.30) கொண்ட தவணை வைப்புக்களிலான முதலீடுகள் பிரத்தியேகமாகப் பேணப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | **திறைசேரி உண்டியல்களில் முதலீடு** | | | |
| | திறைசேரி உண்டியல்கள் | | 14,935,680.00 | 13,823,174.00 |
| | | | **14,935,680.00** | **13,823,174.00** |

பணிக்கொடைக் கடப்பாடுகளுக்காக ரூபா.14,935,680.00 (2019- 13,823,174.00 கொண்ட தவணை வைப்புக்களிலான முதலீடுகள் பிரத்தியேகமாகப் பேணப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | **காசும் காசுக்கு சமமானவையும்** | | | |
| | கையிலுள்ள காசு | குறிப்பு 9.1 | 155,820.00 | 2,811,789.83 |
| | வங்கியிலுள்ள காசு | குறிப்பு 9.2 | 796,473.34 | 563,528.37 |
| | குறுகிய தவணை வைப்புக்கள் | குறிப்பு 9.3 | 516,310,421.87 | 528,919,572.41 |
| | **காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கிற்காகக் காசும் காசுக்கு சமமானவையும்** | | **517,262,715.21** | **532,294,890.61** |
| | **9.1 கையிலுள்ள காசு** | | | |
| | கையிலுள்ள காசு - காசு | | 80,820.00 | 397,524.06 |
| | காசோலைகள் | | - | 2,339,265.77 |
| | முற்பண முறையிலுள்ள சில்லறைக் காசு | | 75,000.00 | 75,000.00 |
| | | | **155,820.00** | **2,811,789.83** |

**அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.**
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடரும்**

| **2020 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்** | | **2020** | **2019** |
|---|---|---|---|
| **9.2 வங்கியிலுள்ள காசு** | | | |
| மக்கள் வங்கி – நாரஹேன்பிட்டி | | 744,847.27 | 496,518.37 |
| மக்கள் வங்கி – நாரஹேன்பிட்டி (ஆசன ஒதுக்கீடு) | | 51,626.07 | 67,010.00 |
| | | **796,473.34** | **563,528.37** |
| **9.3 குறுகிய தவணை வைப்புக்கள்** | | | |
| குறுகிய தவணை மற்றும் அழைப்பு வைப்புக்களில் முதலீடு | | 65,668,245.22 | 61,292,527.90 |
| REPOவில் முதலீடு | | 450,261,379.54 | 467,312,284.67 |
| சேமிப்புக் கணக்கு – தேசிய சேமிப்பு வங்கி | | 380,797.11 | 314,759.84 |
| | | **516,310,421.87** | **528,919,572.41** |

பணிக்கொடைக் கடப்பாடுகளுக்காக ரூபா.380,797.11 (2019- 314,759.84) கொண்ட சேமிப்பு வைப்புக்கள் பிரத்தியேகமாகப் பேணப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| **10** | **அரசாங்க மானியங்கள்** | | |
| | **ஜனவரி 01இல் உள்ளவாறு மீதி** | **267,821,299.86** | **295,050,931.97** |
| | வருடத்தில் கிடைக்கப்பெற்ற மானியங்கள் | - | - |
| | அரசாங்க மானியங்களின் கடன்கழிப்பு | (24,315,448.84) | (27,229,632.11) |
| | **திசெம்பர் 31இல் உள்ளவாறு மீதி** | **243,505,851.02** | **267,821,299.86** |

இலங்கை அரசிடமிருந்து பெற்ற நாரஹேன்பிட்டி, 241, பூங்கா வீதியில் உள்ள காணி வழங்கிய காலப் பகுதியில் இருந்தநியாயமான பெறுமதியில் பணம் சாரா அரச நிதி மற்றும் சொத்துக்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன், கட்டடத்தின் ஆயுட்காலம் முழுதும் இலாபம் அல்லது நட்டத்தில் மானியத்தை கடன்கழிக்கப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| **11** | **இளைப்பாற்று நலன் கடப்பாடுகள்** | | | |
| | **ஜனவரி 01இல் உள்ளவாறு மீதி** | | 45,668,232.50 | 40,817,143.00 |
| | வருடத்திற்கான இனங்காணப்பட்ட செலவினங்கள் | | 9,162,857.50 | 7,744,054.50 |
| | வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | | -1,697,640.00 | (2,892,965.00) |
| | **திசெம்பர் 31இல் உள்ளவாறு மீதி** | | **53,133,450.00** | **45,668,232.50** |
| **12** | **செலுத்தவேண்டியவை** | | | |
| | வாடகைக் கொள்வனவுகள் | | 47,071.79 | 44,293.79 |
| | முத்திரைக் கட்டணங்கள் | | 28,375.00 | 15,500.00 |
| | காப்புறுதி | | 379.00 | 379.00 |
| | பெறுவோன் வரி | | 27,418.00 | 23,218.00 |
| | நானாவிதக் கடன்கொடுத்தோர் | | 62,405.00 | 12,215,182.19 |
| | முற்பணமாகப் பெற்றவை | | - | 41,329,368.55 |
| | ஏனைய செலுத்தவேண்டியவை | | 851,944.27 | 777,774.69 |
| | EPF செலுத்தவேண்டியவை | | 61,702.50 | - |
| | ETF செலுத்தவேண்டியவை | | 7,404.30 | - |
| | வங்கிக் கடன்கள் மற்றும் வைப்புக்கள் | | 10,729.00 | 23,600.00 |
| | பேருந்து உரிமையாளருக்கு ரிக்கட்ட முன்பதிவிற்கான செலுத்தவேண்டியவை | | 11,266.07 | 26,650.00 |
| | ஏல முறி கோரல் | | - | 4,896,212.70 |
| | செயலாற்றுகை முறி கோரல் | | - | 2,438,700.00 |
| | BIA நுழைவாயில் செயற்றிட்டம் | | 761,790.00 | 761,790.00 |
| | Thirasara பாடசாலை செயற்றிட்டம் | | - | - |
| | | | **1,870,484.93** | **62,552,668.92** |
| **13** | **ஏற்பாடுகள் மற்றும் சேர் செலவினங்கள்** | | | |
| | சேர் செலவினங்கள் - செயற்றிட்டங்கள் | **குறிப்பு 13.1** | 89,678,696.58 | 24,240,960.37 |
| | சேர் செலவினங்கள் - மீண்டெழுபவை | **குறிப்பு 13.2** | 17,977,365.60 | 13,570,082.42 |
| | கணக்காய்வுக் கட்டணங்களுக்கான ஏற்பாடு | | 1,476,026.00 | 1,330,026.00 |
| | | | **109,132,088.18** | **39,141,068.79** |

**அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.**

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடரும்**

| 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 2020 | 2019 |
|---|---|---|
| **13.1 சேர் செலவினங்கள் - செயற்றிட்டங்கள மீண்டெழுபவை** | | |
| சமூகரீதியான கடப்பாடுடைய பேருந்துச் சேவைகளின் ஏற்பாடு | 87,026,249.19 | 17,991,665.44 |
| தனியார் பேருந்துத் தொழிற்றுறையின் சீராக்கம் | 237,999.96 | 311,752.00 |
| தரம் மற்றும் கட்டண விதிகள் | 1,581,009.92 | 2,102,005.33 |
| திறன் அபிவிருத்தி | 0.00 | 246,747.30 |
| போக்குவரத்து தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சி | 77,470.00 | 120,978.08 |
| வருடாந்த தேசிய புள்ளிவிபர அறிக்கையினைத் தயாரித்தல் | | 1,433,997.00 |
| | **88,922,729.07** | **22,207,145.15** |
| **மூலதனம்** | | |
| தனியார் பேருந்துத் தொழிற்றுறையின் சீராக்கம் | 755,967.51 | 2,033,815.22 |
| | **755,967.51** | **2,033,815.22** |
| | **89,678,696.58** | **24,240,960.37** |

| | | |
|---|---|---|
| **13.2 சேர் செலவினங்கள் - மீண்டெழுபவை** | | |
| துப்புரவாக்கல் சேவை | 702,534.78 | 1,236,932.58 |
| தொடர்பாடல் | 354,392.45 | 257,121.59 |
| மின்சாரம் மற்றும் வலு | 582,381.65 | 631,382.77 |
| ஊழியர் நலன்புரி | 3,255,054.70 | 180.00 |
| ஊழியர் மருத்துவத் திட்டம் | 5,000.00 | 7,500.00 |
| EPF | - | 58,011.00 |
| ETF | - | 6,961.32 |
| எரிபொருள் மற்றும் மசகெண்ணெய் | 330,075.58 | 304,517.88 |
| விடுமுறைக் கொடுப்பனவு- நிறைவேற்று | - | 67,658.00 |
| மொழி கொடுப்பனவு | 260.00 | 487.00 |
| சட்ட கட்டணம் | 223,600.00 | 290,500.00 |
| உள்நாட்டுப் பயணம் | 63,962.50 | 39,257.50 |
| மோட்டார் வாகனங்களின் பராமரிப்பு | 334,118.39 | 254,811.74 |
| அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு | 35,429.00 | 34,347.49 |
| தொழில்வாண்மைப் பிரிவினருக்கான உறுப்புரிமைக் கட்டணம் | 21,000.00 | 12,500.00 |
| கூட்டங்களுக்கான உணவுகள் மற்றும் சிற்றுண்டிகள் | 8,615.00 | 3,690.00 |
| செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகள் | 57,040.00 | 55,960.00 |
| அலுவலகத் தேவைப்பாடுகள் | 395,580.00 | 145,554.00 |
| ஏனைய செலவினங்கள் | 84,449.00 | - |
| மேலதிக நேர மற்றும் விடுமுறைக் - நிறைவேற்று அதிகாரமற்ற | 913,034.00 | 1,215,867.00 |
| பத்திரிகை அறிவித்தல் | 19,440.00 | - |
| சம்பளங்களும் ஊதியங்களும் | 221,954.00 | 208,664.60 |
| பாதுகாப்புச் சேவை | 2,220,904.17 | 1,513,350.00 |
| பணிக்குழாத்தினர் பயிற்சி | 45,336.74 | 44,500.00 |
| போக்குவரத்து மற்றும் வாடகைக் கட்டணங்கள் | 187,539.00 | 496,800.00 |
| நீர் | 36,120.10 | 56,213.69 |
| பற்றுச்சீட்டுகளுக்கான முத்திரை | 2,825.00 | 17,825.00 |
| பயன்படுத்தப்படாத லீவு கொடுப்பனவு | 7,876,719.54 | 6,609,489.26 |
| | **17,977,365.60** | **13,570,082.42** |

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடரும**

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | | 2020 | 2019 |
|---|---|---|---|
| 14 | **வருவாய்** | | |
| | **14.1 அனுமதிப்பத்திர வருவாய்** | | |
| | பயணவழி அனுமதிப்பத்திர வருமானம் | 30,000.00 | 440,000.00 |
| | அனுமதிப்பத்திர புதுப்பித்தல் வருமானம் | 10,987,836.00 | 21,432,500.00 |
| | பயணவழி விலைமனு வருமானம் | 131,819,474.05 | 307,815,617.95 |
| | | **142,837,310.05** | **329,688,117.95** |
| | **14.2 ஏனைய வருவாய்கள்** | | |
| | நிர்வாகஞ்சார் வருவாய் | 14,666,500.00 | 35,330,347.24 |
| | பெஸ்ரியன் மாவத்தை மலசலகூட வருமானம் | 9,590,221.02 | 9,480,746.27 |
| | பல்வேறுபட்டவை | 27,280,210.13 | 36,466,862.75 |
| | | **51,536,931.15** | **81,277,956.26** |
| | **மொத்த வருவாய்** | **194,374,241.20** | **410,966,074.21** |

**4,896,212.70 ரூபாவிற்கான ஏல முறி கோரல் மற்றும் 2,438,700.00 ரூபாவிற்கான செயலாற்றுகை முறி கோரல்**

2020இல் தர்மதாச கன்ஸ்டரக்ஷனிடமிருந்து மீட்டப்பட்ட ஏல முறி மற்றும் செயலாற்றுகை முறி என்பன வட மாகாண சபைக்கு கிளிநொச்சி பேருந்து தரிப்பிடத்தை ஒப்படைத்ததன் பின்னர் ஒரு வருமானமாக இனங்காணப்பட்டது.

| | | 2020 | 2019 |
|---|---|---|---|
| 15 | **ஏனைய வருமானம்** | | |
| | **15.1 வட்டி வருமானம** | | |
| | வைப்புக்கள் மீதான வட்டி | 33,943,089.70 | 40,742,207.98 |
| | இடர் கடன் மீதான வட்டி | 900,032.00 | 941,158.00 |
| | | **34,843,121.70** | **41,683,365.98** |
| | **15.2 ஏனையவை** | | |
| | அரசாங்க மானியங்களின் கடன்கழிப்பு | 24,315,448.84 | 27,229,632.11 |
| | | **24,315,448.84** | **27,229,632.11** |
| | | **59,158,570.54** | **68,912,998.09** |
| 16 | **தொழிற்படு செலவுகள்** | | |
| | **16.1 ஆளணி ஊதியங்கள்** | | |
| | சம்பளங்களும் ஊதியங்களும் | 87,241,658.40 | 81,424,350.52 |
| | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 17,079,388.00 | 17,671,544.00 |
| | தொழிலவாண்மைசார் கொடுப்பனவு | 665,613.00 | 655,807.00 |
| | மொழிக் கொடுப்பனவு | 281,149.00 | 292,229.60 |
| | ஊழியர் சேமலாப நிதியம் | 15,768,117.66 | 14,809,251.45 |
| | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 3,153,623.53 | 2,969,183.09 |
| | விடுமுறைக் கொடுப்பனவு – நிறைவேற்று | 707,293.00 | 1,290,504.00 |
| | மேலதிக நேர மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு – நிறைவேற்று அதிகாரமற்ற | 10,341,317.00 | 16,030,244.00 |
| | பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைகளைக் காசாக்கல் | 8,030,919.54 | 6,824,177.26 |
| | பணிக்கொடை | 9,162,857.50 | 7,744,054.50 |
| | மிகையூதியம் | 2,688,750.00 | 2,754,658.00 |
| | | **155,120,686.63** | **152,466,003.42** |
| | **16.2 போக்குவரத்து** | | |
| | மோட்டார் வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு | 3,982,200.81 | 4,126,839.61 |
| | எரிபொருள் மற்றும் மசகெண்ணெய் | 3,565,232.74 | 4,671,814.14 |
| | போக்குவரத்து மற்றும் வாடகைக் கட்டணங்கள் | 4,254,930.65 | 7,782,647.50 |
| | அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி | 1,067,837.88 | 1,105,002.39 |
| | | **12,870,202.08** | **17,686,303.64** |
| | **16.3 பயணம் மற்றும் பிழைப்பூதியம்** | | |
| | வெளிநாட்டுப் பயணம் | - | 7,400.00 |
| | உள்நாட்டுப் பயணம் | 1,500,474.75 | 3,784,047.98 |
| | | **1,500,474.75** | **3,791,447.98** |

| | திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 2020 | 2019 |
|---|---|---|---|
| | **16.12 ஏனைய செலவினங்கள்** | | |
| | பல்வேறு செலவினங்கள் | 1,681,689.90 | 383,251.50 |
| | பற்றுச்சீட்டுக்களுக்கான முத்திரைகள் | 17,500.00 | 63,900.00 |
| | | **1,699,189.90** | **447,151.50** |
| **17** | **செயற்பாடற்ற வருவாய்** | | |
| | சொத்துக்களின் அகற்றுகை | 15,430.00 | 40,175.00 |
| | | **15,430.00** | **40,175.00** |
| **18** | **செயற்றிட்டங்களுக்கான அரசாங்க மானியங்கள்** | | |
| | செயற்றிட்டங்களுக்கான அரசாங்க மானியங்கள் - மீண்டெழுபவை | 401,999,970.00 | 581,750,000.00 |
| | | **401,999,970.00** | **581,750,000.00** |
| **19** | **19.1 அரசாங்க மானியங்கள் மீதான விசேட செயற்றிட்டச் செலவினங்கள்** | | |
| | மீண்டெழும் செயற்றிட்டச் செலவினங்கள் | 401,999,970.00 | 581,750,000.00 |
| | | **401,999,970.00** | **581,750,000.00** |
| | **19.2 NTC நிதியங்கள் மீதான விசேட செயற்றிட்டச் செலவினங்கள்** | | |
| | மீண்டெழும் செயற்றிட்டச் செலவினங்கள் | 20,626,255.00 | 26,950,120.15 |
| | மூலதனச் செயற்றிட்ட செலவினங்கள் | 4,241,837.93 | 11,105,330.21 |
| | | **24,868,092.93** | **38,055,450.36** |

**2019 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

ளுடுீருளுயு -3 கணக்கீட்டுக் கொள்கைகள் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சரிப்படுத்தல்கள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தவறுகள் ஆகியவற்றில் மாற்றங்கள் பின்வருமாறு.

01) 1,467,427.50 ரூபா 2019இல் வருமானம் கிடைக்கவேுண்டியவை கணக்கில் வரவுவைப்பதன் மூலமும் பற்றுவைப்பதன் மூலம் அதனை நீக்கியும் 2018ஆம் ஆண்டிற்கான பெஸ்ரியன் மாவத்தை மலசலகூட வருமானம் கிடைக்கவேண்டிவையாக இனங்காணப்பட்டது.

02) 520,000.00 ரூபா 2019இல் வருமானம் கிடைக்கவேுண்டியவை கணக்கில் வரவுவைப்பதன் மூலமும் பலதரப்பட்டவை வருமானத்தை பற்றுவைப்பதன் மூலம் அதனை நீக்கியும் 2018ஆம் ஆண்டிற்கான டுநுனு பலகைகள் வாடகை வருமானம் கிடைக்கவேண்டிவையாக இனங்காணப்பட்டது.

03) 25,100.00 ரூபா 2019இல் வருமானம் கிடைக்கவேுண்டியவை கணக்கில் வரவுவைப்பதன் மூலமும் பலதரப்பட்டவை வருமானத்தை பற்றுவைப்பதன் மூலம் அதனை நீக்கியும் 2018ஆம் ஆண்டிற்கான சொத்துக்களை அகற்றுவதற்கு கிடைக்கவேண்டிவையாக இனங்காணப்பட்டது.

04) 13,950.00 ரூபா இணையவழி ரிக்கட் முன்பதிவு வருமானத்தை வரவு வைப்பதன் மூலமும் ரிக்கட்ட முன்பதிவு முறைக்கான பேருந்து உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை பற்றுவைப்பதன் மூலம் அதனை நீக்கியும் 2019 திசெம்பர் மாதத்திற்கான இணையவழி ரிக்கட்ட முன்பதிவு வருமானமாக இனங்காணப்பட்டது.

05) 34,806.00 ரூபா மற்றும் 6,589.00 ரூபா என்பன தவறுதலாகப் பதியப்பட்ட நீுகு செலுத்தவேண்டியவை மற்றும் நுவுகு செலுத்தவேண்டியவை கணக்குகளில் பற்றுவைத்தல் மூலம் நீக்கி மற்றும் நீுகு ரூ நுவுகு செலவினக் கணக்குகளில் வரவுவைப்பதன் மூலம் நீுகு ரூ நுவுகு செலவினங்களாக இனங்காணப்பட்டன.

06) ரூபா, 67,658.00 487.00 ரூபா, 1,215,867.00 ரூபா என்பன மொழிக் கொடுப்பனவு, விடுமுறைக் கொடுப்பனவு (நிறைவேற்று), மேலதிக நேர மற்றும் விடுமுறை கொடுப்பனவு (நிறைவேற்று அதிகாரமற்ற) கணக்குகளில் பற்றுவைக்கும் வகையில் மற்றும் சேர் செலவினங்கள் கணக்கில் வரவு வைப்பதன் மூலம் 2019ஆம் ஆண்டிற்கான மொழிக் கொடுப்பனவு, விடுமுறைக் கொடுப்பனவு (நிறைவேற்று), மேலதிக நேர மற்றும் விடுமுறை கொடுப்பனவு (நிறைவேற்று அதிகாரமற்ற) என இனங்காணப்பட்டன.

07) 17,981.66 ரூபா நிறுவனஞ்சார் திறன் அபிவிருத்தி கணக்கில் வரவுவைப்பதன் மூலம் மற்றும் நானாவித கடன்கொடுத்தோர் கணக்கில் பற்றுவைப்பதன் மூலம் அதனை நீக்கியும் ஆலோசனைக் கொடுப்பனவிற்கான மேலதிக ஏற்பாடாக இனங்காணப்பட்டது.

08) 2,781,161.06 ரூபா நிறுவனஞ்சார் திறன் அபிவிருத்தி கணக்கில் பற்றுவைப்பதன் மூலம் மற்றும் கட்டடக் கணக்கில் வரவுவைப்பதன் மூலம் அதனை நீக்கியும் மீண்டெழும் செலவினமாக இனங்காணப்பட்டது.

09) 139,058.05 ரூபா கட்டடக் கிரயமாகிய 2,781,161.06 ரூபாவிற்கான தேய்மானத்தின் மேலதிக ஏற்பாடாக இனங்காணப்பட்டது,

2019 நிதிக் கூற்றுக்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மேற்படி சரிப்படுத்தல்களின் காரணமாக 2019ஆம் ஆண்டிற்கான தேறிய மிகை.்.பற்றாக்குறை 178,379,346.39 ரூபாவில் இருந்து 172,514,031.98 ரூபா வரை குறைந்துள்ளது.

திரண்ட மிகை.்.பற்றாக்குறை 612,599,883.10 ரூபாவில் இருந்து 606,734,568.69 ரூபா வரை குறைய இச்சரிப்படுத்தல்கள் ஏதுவாகின.

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடரும்

# கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை

මගේ අංකය
எனது இல.
My No. } சீடீபீஏ/என்டீசீ/எப்ஏ/01/2020/130 මබේ අංකය
உமது இல.
Your No. } දිනය
திகதி
Date } 2021 யூலை 30 ஆம் திகதி

தலைவர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினையும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களினால் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமையினையும் மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச்செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) முன்னைய வருடத்தின் கட்டிட பராமரிப்புச் செலவுகள் மூலதனப்படுத்தப்பட்ட பிழையை சரிசெய்யும் போது அந்த பராமரிப்புச் செலவுக்கு சீர் செய்யப்பட்டிருந்த ரூபா 1,139,058 ஆன தேய்வுப் பெறுமதி நடப்பு வருடத்தின் தேய்வு செலவிலிருந்து குறைப்பட்டதனால் மீளாய்வாண்டின் தேய்வு செலவு அந்த அளவில் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ஆணைக்குழுவின் நிதியத்தை பயன்படுத்தி விசேட செயற்திட்டம் நடைமுறைப்படுத்தலின் கீழ் செலவு செய்யப்பட்ட ரூபா 24,868,093 அரச மானியங்கள் கீழ் செலவொன்றாக தேறிய இலாபத்திற்கு பின்னர் சீர் செய்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த விசேட செயற்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்ற நடைமுறையிலுள்ள வேலைகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 4,241,838 மீண்டெழும் செலவொன்றாக கருதி வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டமையால் ஆணைக்குழுவின் இலாபம் மற்றும் நடைமுறையிலுள்ள வேலைகள் அந்த பெறுமதியில் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்.**

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின்னர் எனக்கு பெற்றுத் தருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற ஆணைக்குழுவின் 2020 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இருப்பினும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிராத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் பொருள்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

2

நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்பட்டிராததுடன், நான் அது தொடர்பாக எவ்விதத்திலும் சான்றுறுதிப்படுத்தல் அல்லது அபிப்பிராயமொன்றை கூறவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்கு உரிய எனது பொறுப்பாக காணப்படுவது மேலே அடையாளங் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெறக் கூடியதாக இருக்கும் போது வாசிப்பு மற்றும் அவ்வாறு மேற்கொள்ளும் போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகைகளில் பெறப்பட்ட எனது அறிவிற்கெட்டியதன் பிரகாரம் போதுமான வகையில் பொருத்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்வதேயாகும்.

ஆணைக்குழுவின் 2020 வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போது அதில் பொருண்மையான பிழையான குறிப்பிடுதல் காணப்படுவதாக நான் முடிவுக்கு வந்தால், சரி செய்வதற்காக ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினருக்கு அந்த விடயங்கள் தொடர்பாடல் படுத்தப்பட வேண்டும். மேலும் சரிசெய்யப்படாத பிழையான குறிப்பிடுதல்கள் காணப்பட்டால் அவை அரசியலமைப்பின் 154(6) அரசியலமைப்பின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் ஆற்றலினை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக காணப்படுவதோடு முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால், அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள்,

தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும்

வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம், இவ் அறிக்கையில் 1.2 பந்தியின் கீழ் குரிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு உட்பட்ட கணக்காய்வுக்கான அவசியமான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரீசீலனையின் போது காணப்பட்டதன் பிரகாரம் முறையான நிதி அறிக்கைப் பேரவை பேணப்பட்டிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திருந்தது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் முன்னைய வருடத்திலே என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2 பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மற்றும் போதுமான விடயங்களுக்குள் வரையறுக்கப்படுவதன் மூலம் பின்வரும் வெளிப்படுத்துதல்களை மேற்கொள்ளும் அளவிற்கு எதுவும் எனது அவதானித்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுப் பேரவையின் யாதேனும் உறுப்பினருக்கு ஆணைக்குழுவின் சம்பந்தமாக யாதேனும் ஒப்பந்தமொன்றின் சம்பந்தமாக நேரடியாக அல்லது வேறுவழியில் சாதாரண வியாபார நிலைமைக்கு அப்பால் தொடர்பொன்று காணப்படுவதாக

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பின்வரும் அவதானம் தவிர்ந்த யாதேனும் உரிய எழுத்து மூல சட்டத்திற்கு அல்லது ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டு பேரவையினால் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விஷேட ஏற்பாடுகளுக்கு இணங்காமல் செயற்பட்டிருப்பதாக

| சட்டங்கள், விதிகள்/ பணிப்புரைக்கான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 1978 திசெம்பர் 18 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | ஆணைக்குழுவினால் சொத்துக்களின் பெறுமதி வருடாந்தம் தேய்வடைதல் தொகை அதிகரித்தல் அல்லது நீக்கப்படுதல் தொடர்பாக பரிசோதனைக்கு உட்படுத்தக்கூடிய வகையில் வெவ்வேறாக குறிப்பிட்டு சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 11 மற்றும் 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | |
| (i) 8.2.2 ஆம் பந்தி | மிகைப் பணம் முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரின் இணக்கம் மற்றும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது நிறுவனத்தினால் ரூபா 42,053,092 நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 14,935,680 திறைசேரி உண்டியல்களில் 2020 திசெம்பர் 31 திகதியில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், அத்திகதியில் உள்ளவாறு ரூபா 516,310,421 தொகை |

7

| | | |
|---|---|---|
| | | குறுகிய கால முதலீடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | 8.3.9 ஆம் பந்தி | உரிய வரைவு அமைச்சு அல்லது ஏனைய அரச நிறுவனங்களுக்காக அரச வியாபாரத்தினால் செலவுகளை மேற்கொள்ளல் அல்லது அவர்களிடம் காணப்படுகின்ற மனித வளங்கள் உள்ளடங்களாக ஏனைய வளங்களை பயன்படுத்தல் இடம்பெறக்கூடாத போதிலும், ஆணைக்குழுவினால் பெண் முகாமைத்துவ உதவியாளரொருவர் 2020 ஒக்டோபர் 12 ஆந் திகதியில் இருந்து போக்குவரத்து அமைச்சின் சேவைக்காக விடுவிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதிவரைக்கும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 442,932 செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | 9.1.2 ஆம் பந்தி | நிறுவனத்தின் நலன்புரி திட்டங்கள் தொடர்பாக திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத் தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டி இருந்த போதிலும் அவ்வாறு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ஊழியர் காப்புறுதி மற்றும் நலன்புரி அலுவல்களுக் காக ரூபா 6,744,070 தொகை செலவிடப் பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | இடைக்கால கட்டுநிதியை பெற்றுக் கொடுத்தல் சந்தர்ப்பத்தில் உச்ச அளவாக ரூபா 100,000 வரையறுக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அந்த வரையறையை விஞ்சும் வகையில் 2020 ஆண்டிற்குள் 7 சந்தர்ப்பங்களில் மொத்தமாக ரூபா 1,678,155 அளவு முற்பணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. |

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த ஆணைக்குழுவின் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மறறும் கடமைகளின் இணங்காததாக நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக.

8

1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 9ஆம் பிரிவின் ஆணைக்குழுவின் தொழிற்பாட்டின் கீழ் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குதல் மற்றும் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் படி பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக ஆணைக்குழுவிற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஏவ்வாராயினும், ஆணைக்குழுவின் அதிகார சட்டத்தில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக முறையான செய்முறை ஒன்று அறிமுகப்படுத்தி இருக்கவில்லை. மேலும், கணக்காய்வு திகதியான 2021 மார்ச் மாதத்திலும் ஆணைக்குழுவினால் பிரயாணிகள் சேவை அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரச் சட்டம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த ஆணைக்குழுவின் வளத்தை சிக்கனமாக வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக கால வரையறைக்குள் உரிய சட்டங்கள், விதிகளுக்கு இணங்க பெறுகைக்குட்படுத்தி பாவனைக்குட்படுத்தபட்டிராமை.

(அ) கொரோனா தொற்றினால் செயலிழந்து காணப்பட்ட மகாணங்களுக்கிடையிலான பேருந்து ஓட்ட நடவடிக்கைகளை சுமூக நிலைக்கு கொண்டுவருவதற்காக உதவியை பெற்றுக்கொடுக்கும் போது கெபினட் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டிய அனைத்து தாமதக் கட்டணம், டென்டர் கட்டணம் நாளதுவரையாக்கப்பட வேண்டிய கட்டணம், லொக் பத்திரம், ஒப்பந்த பத்திர கட்டணத்தை விடுவிப்பதற்கு ஆணைக்குழுவினால் தன்னிச்சையாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த தீர்மானத்தினால் 2020 ஆம் ஆண்டின் நிறுவனத்திற்கு கிடைக்கப் பெறாமல் போன வருமானம் ரூபா 186,850,808 ஆகும். இவ்வாறாக மேலே குறிப்பிட்டதன் பிரகாரம் ஆணைக்குழுவின் தொடர் இலக்கத்திற்கு பிரதானமான வருமான வழியை மாற்றுமுன்மொழிவுகள் எதுவுமின்றி முழுமையாக அறவிடாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதனால் எதிர்வரும் வருடங்களின் நிறுவனத்தின் எதிர்கால இயக்கத்திற்கு இடையூறொன்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஆணைக்குழுவிற்கு தேவையான செயற்பாட்டு தேவைப்பாடுகளை முதலீட்டின் ஊடாக பெற்றுக்கொள்ளும் போது அதற்காக தகைமையுள்ள முதலீடுகளை அடையாளங் காணாததால் அதனால் கிடைக்கப்பெற வேண்டிய வட்டி வருமானங்கள் அடிக்கடி குறைந்து காணப்பட்டது.

(இ) பஸ் வாகனச் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பாவனைக்குட்படுத்துகின்ற GPS கட்டமைப்பை பராமரிப்பதற்காக 2020 வருடத்திற்குள் ரூபா 6,642,350 செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், சேவை வருமானமொன்றாக வருடத்திற்குள் ரூபா 2,047,500 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன்படி GPS கட்டமைப்பை பராமரிப்பதற்காக ஆணைக்குழுவிற்கு ரூபா 4,594,850 மேலதிக செலவொன்று மேற்கொள்ள நேர்ந்திருந்தது. பஸ் வாகனமொன்றில் அறவிடப்படுகின்ற சேவைக் கட்டணமான ரூபா 3,000 தொகை மீளாய்வாண்டிற்குள் ரூபா 1,500 வரை நூற்றுக்கு 50 இல் குறைந்தது இதற்கு காரணமாகியிருந்தது.

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) ஆணைக்குழுவினால் பஸ் கம்பனிக்கு விநியோகிக்கப்பட்டுள்ள அலுவலக உபகரணங்கள்மற்றும் கணனி பாகங்கள் 117 அலகு உருப்படிகளுக்காக கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. மேலும் ஆணைக்குழுவின் அனைத்து சொத்துக்களுக்கான அடையாளங்காணும் இலக்கமொன்று பயன்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறு இலக்கமொன்று இல்லாமல் 519 உருப்படிகள் கணக்கெடுப்பிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆணைக்குழுவின் கணக்கெடுப்பு அறிக்கையின் பிரகாரம் 67 அலகு உருப்படிகள் கணக்கெடுப்பின் போது அடையாளங் காண்பதற்கு முடியாது காணப்பட்டது.

(ஆ) ஆணைக்குழுவினால் 2020 ஆம் ஆண்டிற்குள் டென்டர் மூலமாக புதிய அனுமதிப்பத்திரமொன்றை விநியோகிப்பதற்கு பதிலாக தின அடிப்படையில் அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டதனால் கிடைக்கப்பெற வேண்டிய வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. மேலும், இதன் காரணமாக வருடத்திற்குள் நடைமுறைப்படுத்துவதற்கு 3040 எண்ணிக்கையான பஸ் வாகனங்களுக்கு GPS கட்டமைப்பை பொருத்துவதற்கு எதிர்பார்த்திருந்த

போதிலும் 1159 வாகனங்களுக்கே பொருத்துவதற்கு முடியுமாயிருந்தது. இது நூற்றுக்கு 38 எண்ணிக்கை மாத்திரமே.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்ட மற்றும் முறைப்படுத்தற் தேவைகள் தொடர்பாக 2018 இல 19ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் பின்வருமாறு.**

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) முந்தைய ஆண்டிற்குரிய தேய்மானப் பெறுமதி 1,139,058 ரூபா அன்று, 139,058.05 ரூபாவே என்பதுடன், அதனை நடப்பாண்டின் தேய்மானச் செலவினத்திலிருந்து நீக்கியமை தவறுதலாக ஏற்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது குறிப்பிட்ட தவறினைச் சரி செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்பட்டது.

(ஆ) விசேட மூலதன வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவதன் கீழ் செலவிடப்பட்ட செலவுகளில் உள்ளடக்கியுள்ள சொத்துக்களாக இனங்காணப்பட்ட பெறுமதி மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன், மீதிச் செலவு வருமானங்கள் மற்றும் செலவினங்கள் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

## 2. வேறு சட்ட மற்றும் முறைப்படுத்தற் தேவைகள் தொடர்பான அறிக்கை

(அ) உரிய விபரங்களைக் கொண்ட சொத்துக்கள் ஆவணம் தயார்செய்யப்பட்டு வருகின்றது.

(ஆ)

i. தற்காலிக மேலதிகப் பணத்தினை முதலீடு செய்வதற்கு திறைசேரியின் அனுமதியினைப் பெறுவதற்காக தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உரிய கடிதத்தின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இல ஆர்ரீ/பீ/என்ரீசீ/எவ்ஏ/2012/22 கொண்ட கணக்காய்வு விசாரணைக்கான பதிலுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.)

   எவ்வாறெனினும் 2012 ஆகஸ்ட் மாதம் 22ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பிலான பொதுக் கூட்டத்தின் போது, குறுகிய கால மேலதிக நிதியங்கள் ஏழு நாள் கோரல் வைப்புக்களில் முதலீடு செய்வதற்குப் பதிலாக ஒரு பகுதியினை கூடிய வட்டி வருமானத்தைப் பெறுவதற்காக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (பொது முயற்சிகள் தொடர்பிலான பொதுக் கூட்டத்தின் குறிப்புக்களின் பிரதியொன்று இல ஆர்ரீ/பீ/என்ரீசீ/எவ்ஏ/2012/22 கொண்ட கணக்காய்வு விசாரணைக்கான பதிலுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.)
   அதற்கு மேலதிகமாக தற்காலிக மேலதிகப் பண முதலீடு செய்வதற்கு திறைசேரியின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சிற்கு பலமுறை கோரிக்கை விடப்பட்டுள்ளதுடன், 2019.02.07ஆந் திகதியிலும் கொண்ட கோரிக்கை ஒன்று முன்வைத்துள்ளதுடன் இது வரையில் அதற்கு பதிலொன்று கிடைக்கவில்லை என்பதையும் தயவுடன் அறிவிக்கின்றேன்.

ii. போக்குவரத்து அமைச்சிடமிருந்து கிடைக்கப் பெற்ற ஆவு/01/05/05/01 இலக்கம் கொண்ட மற்றும் 2020.09.28ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், திருமதி இந்திகா லக்மாலி 2020.10.12ஆந் திகதி முதல் போக்குவரத்து அமைச்சின் கௌரவ போக்குவரத்து அமைச்சரின் உதவி பணிக்குழுவிற்கு விடுவிக்கப்பட்டுள்ளார்.
iii. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஊழியர்கள் அக்ரஹார காப்புறுதி முறைக்கு பங்களிப்புச் செய்துள்ளனர். அது அரச ஊழியர்களுக்காகச் செயற்படும் ஒரு காப்புறுதிக்

கொள்கையாகும். இதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அவ்வாறே, தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தின் மூலம் ஊழியர் நலனுக்காக அனுசரணை வழங்குவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

iv. உரிய பணிகளை கடன் அடிப்படையில் மேற்கொள்வதற்கு முடியாது போனமையால், அம்மொத்தத் தொகையும் காசோலை மூலம் முற்பணமாகச் செலுத்தவேண்டி ஏற்பட்டது. அவ்வாறே, நாட்டில் அப்போது நிலவிய கோவிட் தொற்றுப் பரவல் நிலைமையால் பல்வேறு சேவைகளை வழங்குபவர்களின் பற்றுச்சீட்டுக்களுக்கு முற்பணத் தொகை ஒன்றினைச் செலுத்தி பின்னர் முறையான பரிசோதனையின் பின்னர், மீதித் தொகையினைச் செலுத்தவேண்டி ஏற்பட்டது. எவ்வாறெனினும், ஊழியர் நலன்விரும்பி நடவடிக்கைகளுக்கு கொடுப்பனவு செய்யும் போது குறைந்தபட்ச தொகை முற்பணத்தினை வழங்குவதற்கு கவனத்திற் கொள்ளப்பட்டது.

2.2.3 தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத் திருத்தம் 2020 நவம்பர் மாதம் அமைச்சரவை அனுமதிக்கு அனுப்பப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளதுடன், அதன் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்கனவே சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

2.24 கோவிட் 19 தொற்று நாடு முழுதும் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக 2020 மார்ச் மாதம் நடுப்பகுதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் நாடு முழுதும் செயற்படுத்தியதுடன், பின்னர் அந்நிலைமை மாகாணத்திற்கு மாகாணம் படிப்படியாகத் தளர்த்தப்பட்டது.
தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து இயக்க நடவடிக்கைகள் முற்றிலும் முடங்கியது. அவ்வாறே மாகாண ரீதியாக தனிமைப்படுத்தற் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படினும், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களுக்கு இடையில் ஓடுவதனால் அதற்கான சந்தர்ப்பம் கிட்டவில்லை. அதன் படி, மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவையினை ஆரம்பித்தல் 2020 ஜுன் மாதம் முதல் வாரத்தில் மேற்கொள்ளப்படினும், பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டமையால் பேருந்துகள் சாதாரணமாக இயங்கவில்லை என்பதுடன், இயங்கிய பேருந்துகளிலும் மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே பயணிகள் பயணித்தனர்.

இவ்வாறான நிலைமையின் கீழ் பேருந்து இயக்க நடவடிக்கைகள் இயல்பு நிலைக்கு மீளும் வரை தமக்கு நிவரணம் வழங்குமாறு பேருந்துச் சங்கங்களினாலும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திர உரிமையாளர்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டன.
அதன் படி, பேருந்துகள் இயங்காத காலத்திற்கு அதாவது 2020 மார்ச், ஏப்பிரல், மே மாதங்களில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை இற்றைப்படுத்தும் கட்டணங்கள், விலைமனு கட்டணங்கள், அதிவேகப் பாதையில் தற்காலிக அனுமதிப்பத்திர கட்டணங்கள், லொக் பத்திர கட்டணங்கள் மற்றும் தாமதக் கட்டணங்கள் ஆகியவற்றை விடுவிப்பதற்கு 49/2020 கொண்ட பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. அவ்வாறே பேருந்து இயக்க நடவடிக்கைகள் இயல்பு நிலைக்கு மீளாதிருந்தமையால் பணிப்பாளர் சபை பத்திர இல 51/2021 மூலம் மற்றும் 120/2020 மூலம் செப்தெம்பர் மாதம் வரையிலும் பணிப்பாளர் சபை அனுமதி கிடைத்துள்ளது.

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுடன் மற்றும் கௌரவ அமைச்சர் அவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது பேருந்து உரிமையாளர்களுக்கு துரிதமாக நிவாரணத்தை வழங்குவதற்கு பெற்றுக் கொடுத்த அறிவுறுத்தலின் படி பணிப்பாளர் சபை அனுமதியின் கீழ் நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2020 ஒக்தோபர் முதல் வாரத்தில் பிராண்டிக்ஸ் இரண்டாவது கோவிட் அலை ஆரம்பத்துடன்

பேருந்து இயக்க நடவடிக்கைகள் மீண்டும் முடங்கியமையால் பேருந்துச் சங்கங்களின் கோரிக்கையின் பேரில் மென்மேலும் நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் தேவை ஏற்பட்டது.

அவ்வாறே 2020 மார்ச் மாதம் முதல் செப்தெம்பர் மாதம் வரையிலும் ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையிலும் உள்ள காலத்திற்கு நிவாரணம் பெற்றுக் கொடுத்தல் தொடர்பில் அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. பேருந்து உரிமையாளர்களிடம் இருந்து முறையாகக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்தமையால் நேரகாலத்துடன் அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப நிலைமைகளைக் கருத்திற் கொண்டு போக்குவரத்துச் சேவையினை அத்தியாவசிய சேவையாக தொடர்ந்தும் மேற்கொண்டு செல்லும் நோக்கில் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(ஆ) கோவிட் 19 தொற்றுப் பரவல் காரணமாக ஏற்பட்ட எதிர்பாரா செயல்பாட்டு மூலதனத் தேவைகளின் பேரில் முதலீட்டு முதிர்ச்சியின் அடிப்படையில் மீண்டும் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டதுடன், மேலதிகமானவை மீண்டும் முதலீடு செய்யப்பட்டது. மீள முதலீட்டின்போது வட்டி வீதம் குறைந்த பெறுமானத்தைக் கொண்டிருந்ததாயின் கிடைக்க வேண்டிய வட்டி வருமானத்தில் குறைவு ஏற்பட்டுள்ளது.

(இ) GPS கட்டுப்பாட்டு அறை மற்றும் சிம் அட்டைக்கான பணத்தை அறவிடுதல் என்பன இரு வேறு விடயங்களாவதுடன், சிம் அட்டைக்காக அறவிடப்படும் பணத்தை பூீளு கட்டுப்பாட்டு அறையைப் பராமரிப்பதற்கு பயன்படுத்துவது குறித்து எவ்வித நோக்கமோ அல்லது திட்டமோ இந்த செயற்றிட்டத்தினுள் கிடையாது. சிம் அட்டைக்காக அறவிடப்படும் 1500.00 ரூபா தொகையில் அந்த சிம் அட்டைக்காக வருடாந்தம் செலவிடப்படும் 1440.00 ரூபா அளவிலான தொகையை ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். GPS கட்டுப்பாட்டு அறை என்பது ஒட்டுமொத்த மாகாணங்களுக்கு இடையிலான எல்லா பேருந்துகளையும் நெறிப்படுத்துவதற்கு தாபிக்கப்பட்ட ஒன்றாவதுடன், அது வருமானம் ஈட்டுவதற்கன்று பொதுச் சேவையொன்றினை வழங்குவதற்கு மாத்திரம் நோக்கமாகக் கொண்டதாகும். இந்த கட்டுப்பாட்டு அறையினூடாக இபோச மற்றும் மாகாணப் போக்குவரத்து பேருந்துகளையும் தொடர்புபடுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதனால், சிம் அட்டைகளினால் பெறப்படும் வருமானம் கட்டுப்பாட்டு அறை பராமரிப்புச் செலவுடன் செம்மையாக்கம் செய்ய முடியாது.

## 2.3 ஏனைய விடயங்கள்

(அ) சொத்துக்கள் இலக்கங்களை சொத்துக்கள் மீது குறிக்கப்படாத எல்லா சொத்துக்களையும் இனங்கண்டு உரிய இலக்கங்களை சொத்துக்களில் குறிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2020ஆம் ஆண்டினுள் விலைமனு கோரல் முறைமையின் கீழ் புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் கொரோனா தொற்று நாடு முழுதும் பரவியமையால் பேருந்துகளுக்கான பயணிகள் கேள்வி வீழ்ச்சியடைந்ததன் காரணமாக விலைமனு முறைமையில் புதிய பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்களை வழங்கும் தேவை ஏற்படவில்லை.

பூீளு இயந்திரங்களைப் பொருத்துதல் குறித்து விசாரணையில் குறிப்பிட்டுள்ள விடயங்களுடன் இணங்கப்படுகின்றது.

241, උද්‍යාන පාර, කොළඹ 05.
241, பூங்கா வீதிஇ கொழும்பு 05
241, Park Road, Colombo 05